33

33/3-ய

# NEW ERA TAMIL READER

THIRD BOOK

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 1949
MADRAS

V. CHIDAMBARA RAMALINGA PILLAI

S. SUBRAMANIA PILLAI
EDUCATIONAL PUBLISHER
TINNEVELLY JN.

TB
031(3)
N49
146137.

As. 6

3/3-ஆ

# நவீன
# தமிழ்ப் பாடப் புத்தகம்

மூன்றும் வகுப்பு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 1949
MADRAS

வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை
ஆதீன வித்வான்
திருவாவடுதுறை

திருந்திய பதிப்பு

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
திருநெல்வேலி ஜங்ஷன்

பதிவு செய்யப்பட்டது ]

[ விலை 6 அணா

முதற் பதிப்பு : 1939
திருந்திய பதிப்பு : 1948
திருந்திய பதிப்பு : 1949

TB
031137
N49
146137
சென்னை-600 008.

The Hilal Press, Tirunelveli

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 1949
MADRAS

# முன்னுரை

"நவீன தமிழ்ப் பாடப் புத்தகம்" என்னும் புத்தக வரிசை சென்னை வித்யா இலாகா அதிகாரிகள் வெளியிட்டிருக்கும் பாடத் திட்டத்தை அநுசரித்து எழுதப்பட்டிருக்கிறது. பிள்ளைகள் சிறு வயதிலேயே கடவுள் பக்தி, தேச பக்தியுடையவர்களாகி, சமூகத் தொண்டு புரிவதில் ஆர்வம் கொள்ளவும், பிறருடன் பழகவேண்டிய முறைகளைத் தெரிந்துகொள்ளவும், சுகாதார விஷயங்களை அறிந்து கொண்டு தேகாரோக்யத்துடன் வாழவும், கைத்தொழிலில் ஊக்கம் கொள்ளவும் அனுசரணையாகச் சில பாடங்களை இப்புத்தகத்தில் அங்கங்கே சேர்த்துத் திருத்தியமைத்துள்ளோம். இத்துறையில் எங்களுக்கு உதவி புரிந்த ஆசிரியர்களுக்கு எங்கள் வந்தனம் உரித்தாகுக.

இரண்டு, மூன்று முதலிய புத்தகங்களில், நூதன வார்த்தைகள் படிக்கிரமமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சிறுவர்கள் மனத்தைக் கவரும்படியாகப் பாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப் பாடங்கள் அவர்களுக்கு நீதியையும், உலக அறிவையும், இயற்கைப் பொருள் ஞானத்தையும் உண்டாக்கும்படியான முறையில் வரிசைப் படுத்தப்பட்டிருக்கின்றன. இன்றியமையாத கேள்விகளும் அப்பியாசங் களும் பாடத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே, இப்புத்தகங்கள் மாணக்கர்களுக்கு நமது வித்யா அதிகாரிகள் கொடுக்க விரும்பும் பாஷா ஞானத்தை எளிதில் கொடுக்கு மென்று நம்புகிறேன்.

திருவாவடுதுறை
28—10—46

வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை,
ஆதீன வித்வான்

பொருள்களையும் படைத்தவர் அவரே. நம்மையும் மற்றும் எல்லா ஜீவராசிகளையும் காப்பவரும் அவரே. இவ்விதம் நம்மைப் படைத்துக் காக்கும் கடவுளை நாம் பிரார்த்தனை செய்யவேண்டும்.

4 கடவுளைச் சிலர் 'சிவன்' என்பர்; சிலர் 'விஷ்ணு' என்பர்; வேறு சிலர் 'கர்த்தர் என்பர்; மற்றும் சிலர் 'அல்லா' என்பர். கடவுள் ஒருவரே. அவரைப் பல மதத்தினரும் வேறு வேறு பெயர்களால் துதிக்கின்றனர். கடவுட் கொள்கை வேறுபட்டதற்காக நம்மில் ஒருவரை ஒருவர் இகழ்ச்சியாகப் பேசக்கூடாது. ஒருவருக்கொருவர் தீங்கு செய்ய நினைக்கவும் கூடாது. நாம் எல்லாம் கடவுளின் மக்களானதால் ஒருவரோடு ஒருவர் அன்புடன் ஒற்றுமையாய் வாழவேண்டும்.

5. கடவுள் எங்கும் இருப்பவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அவர் அறிவார். நாம் நல்ல காரியம் செய்யும்பொழுது அவர் சந்தோஷப்படுகிறார்; நாம் தீய காரியம் செய்தால் அருவருப்பார். ஆதலால் நாம் எப்பொழுதும் நல்ல காரியங்களையே செய்து வரவேண்டும்.

6. ஒவ்வொரு நாளும் காலையில் நாம் நித்திரையைவிட்டு எழும்பொழுது 'கடவுளே, எனக்குத் துணை செய்யும்' என்று பிரார்த்தனை செய்து கொண்டு எழவேண்டும். ஒவ்வோர் இரவும் படுத்துறங்கப் போகு முன்பும் அவ்வாறே கூறி அவரை நினைக்கவேண்டும். ஒரு தினத்தில் கடவுளை நினைக்கப் பல சந்தர்ப்பங்கள் நேரிடும். ஏதாவது கஷ்டம் வரும்போது அவரை நினைத்தால் அக்கஷ்டம் நீங்கும். ஒரு காரியத்தைத் தொடங்கு முன் அவரைப் பிரார்த்தித்துக் கொண்டால் அந்தக்

காரியம் செம்மையாக முடிவு பெறும். கடவுளைப் பற்றிய நினைப்பு எப்பொழுதும் நம் மனத்தில் இருக்கவேண்டும்.

7. கடவுளைப் பிரார்த்தனை செய்வதால் நமது துன்பங்கள் நீங்கும். பேரின்பம் அடையலாம். சிறுவர்களே, சிறுமிகளே, நீங்கள் தினந்தோறும் கடவுளை அன்புடன் நினைத்து வழிபடுங்கள்.

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.'

## கேள்விகள்

1. கடவுளை என்னென்ன பெயர்களால் துதிக்கின்றனர்?
2. கடவுளின் தன்மை என்ன?
3. கடவுளை எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் நினைக்கலாம்?
4. கடவுளைப் பிரார்த்தனை செய்தால் ஏற்படும் நன்மைகள் என்ன?

## அப்பியாசம்

1. 'கடவுள்'-இது நான்கு எழுத்துக்களால் அமைந்த ஒரு சொல் (வார்த்தை).

2. கடவுள் நம்மைக் காக்கிறார்.-இது ஒரு வாக்கியம். இந்த வாக்கியத்தில் மூன்று சொற்கள் இருக்கின்றன.

3. கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை எழுது :—

(அ) கடவுள் நம்மைக் ——— .

(ஆ) நாம் ——— கடவுளை ——— .



## 2. 'பிறர்க்குத் துன்பம் செய்யேல்'

| | | |
|---|---|---|
| உற்சாகம் | அதிகரித்தது | நியாயம் |
| பொறுக்கி | குறி | பொறுக்க முடியாத |
| வேடிக்கை | வதைக்கலாமா? | ஏற்பட்டிருக்கும் |
| காயம் | துன்பம் | புத்தி |

1. ஒரு குளத்தில் தவளைகள் அதிகமாக இருந்தன. ஒரு நாள் காலையில் பல சிறுவர்கள் அதன் கரையில் நின்றுகொண்டு, கல் எறிந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எறிந்த கல் பட்டுச் சில தவளைகள் இறந்து போயின.

2. இதைக் கண்ட சிறுவர்கள் உற்சாகமாக கற்களைப் பொறுக்கி, மேலும் மேலும் தவளைகள் மீது வீசினார்கள். கல், குறி தவறாமல் தவளைகள் மீது விழுவது அவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. இதனால் இன்னும் சில தவளைகள் இறந்து போயின. பல தவளைகள் காயம் அடைந்தன.

3. சிறுவர்களுக்கு உற்சாகம் அதிகரித்தது. அவர்கள் குறி வைத்துத் தவளைகள் மேல் கல் எறிந்துகொண்டே இருந்தார்கள். அப்பொழுது

அந்தக் குளத்தின் கரை வழியாக ஒரு கிழவர் வந்தார். அவர் அவர்களை நோக்கி, "பிள்ளைகளே! நீங்கள் தவளைகளை இப்படி வதைக்கலாமா?" என்று கேட்டார்.

4. அதற்கு அவர்கள், "தவளைகளை வதைக்க வேண்டுமென்று நாங்கள் கல் எறியவில்லை. எங்கள் விளையாட்டிற்காக இப்படிச் செய்கிறோம்" என்றார்கள். அதைக் கேட்ட கிழவர், "அப்படியா! உங்கள் மேலே ஒருவன் விளையாட்டாகக் கல் எறியலாமா? எறிந்தால் அது உங்களுக்கு எவ்வளவு துன்பங் கொடுக்கும்!" என்று சொன்னார்.

5. இப்படி அவர் சொன்னது சிறுவர்களுக்கு நியாயமாகத் தோன்றியது. "ஒருவன் எங்கள்மேல் கல் எறிந்தால் அஃது எங்களுக்குப் பொறுக்க முடியாத துன்பத்தைக் கொடுக்கும். அப்படித்தான் தவளைகளுக்கும் துன்பம் ஏற்பட்டிருக்கும். இனிமேல் நாங்கள் தவளைகளை வதைக்க மாட்டோம்" என்று அவர்கள் கிழவரிடம் சொன்னார்கள். "விளையாட்டாகவும் ஒருவருக்குத் துன்பம் செய்யக்கூடாது" என்று கிழவர் அவர்களுக்குப் புத்தி சொன்னார்.

### கேள்விகள்

1. குளத்தின் கரையில் சிறுவர்கள் என்ன செய்தார்கள்?
2. கிழவர் அச்சிறுவர்களிடம் என்ன கேட்டார்?
3. அதற்குச் சிறுவர்கள் சொன்ன பதில் என்ன?
4. சிறுவர்களுக்குக் கிழவர் கூறிய புத்திமதி யாது?

### அப்பியாசம்

ஒருவன்—மேல்—எறிந்தால், நீங்கள்—செய்வீர்கள்?

கோடு இட்ட இடங்களில் தகுந்த சொல் இட்டு வாக்கியத்தைப் பூர்த்தி செய்.

குளம் — இடத்தின் பெயர்.
கல் — பொருளின் பெயர்.
தவளை — ,,
சிறுவன் — ,,

குளம், கல், தவளை, சிறுவன்—இவை பெயர்ச் சொற்கள்.



## 3. தேக சுத்தம்

| | | |
|---|---|---|
| சுத்தம் | அசுத்தம் | வெறுப்பார்கள் |
| யோசித்து | துலக்கு | உறுதிப்படும் |
| பழமொழி | வழங்குகிறது | துர்நாற்றம் |
| வேளை | சீயக்காய் | ஈர் |
| பீளை | அடிக்கடி | இடுக்கு |
| நகச்சுற்று | நகக்கண் | உடற்பயிற்சி |

1. பிள்ளைகளே! இந்த இரண்டு பையன்களை யும் பாருங்கள். ஒருவன் சுத்தமாக இருக்கிறான்; மற்றொருவன் அசுத்தமாக இருக்கிறான். சுத்தமான பையனிடம் எல்லாரும் பிரியமாக இருப்பார்கள்; அசுத்தமான பையனை எல்லாரும் வெறுப்பார்கள். தவிர, அசுத்தமான பையனுக்குச் சொறி முதலிய நோய்கள் ஏற்படும். ஆகையால் நீங்கள் ஒவ்வொரு வரும் உங்கள் தேகத்தையும் ஆடைகளையும் சுத்த மாக வைத்துக் கொள்ளவேண்டும். அசுத்தமான

பையன்களைக் கண்டால் அவர்களிடம் அன்பாகப் பேசி, அவர்களுடைய தேகத்தையும் ஆடைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும்.

2. தேகத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள என்ன செய்ய வேண்டுமென்று யோசித்துப் பாருங்கள். தினம் காலையில் எழுந்து மலஜலம் கழித்துச் சுத்தம் செய்து கொண்ட பின்னர் பற்களைத் தேய்த்துச் சுத்தம் செய்யுங்கள். பற்களைத் துலக்குவதற்கு உமிக்கரி, பற்பொடி முதலியவைகளை உபயோகிக்கலாம். ஆலம் விழுது, கருவேலங் குச்சி இவைகளை உபயோகித்தால் பல் இடுக்குகளிலுள்ள அழுக்கு நன்கு நீங்கும்; பற்கள் உறுதிப்படும். ஆகையால் தான் 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி' என்ற பழமொழி வழங்குகிறது.

3. பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாவிட்டால் வாய் துர்நாற்றம் வீசும்; வாய்ப்புண் உண்டாகும்; நாம் உட்கொள்ளும் உணவும் அசுத்தமடைந்து நோய் உண்டாகும். ஒவ்வொரு வேளையும் உணவு உட்கொள்வதற்கு முன்பும், உணவு உட்கொண்ட பின்பும் சுத்தமான தண்ணீரால் வாயை நன்கு கொப்பளிக்க வேண்டும்.

4. தினந்தோறும் சுத்தமான தண்ணீரில் குளியுங்கள். தேகத்தின் மீதுள்ள அழுக்குப் போக அரப்பு, சீயக்காய், சோப்பு இவைகளை உபயோகிக்கலாம். முரட்டுத் துணியாலும் உடம்பைத் தேய்த்து அழுக்கைப் போக்கலாம்.

5. தலைமயிரை எண்ணெய் தடவி வாரிச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்துக்கொள்ளுங்கள். பேன், ஈர் இவைகளைத் தலையில் தங்க விடாதீர்கள்.

இவை ரத்தத்தை உறிஞ்சித் தேக சுகத்தைக் கெடுக்கும். தலையில் பேன், ஈர் இவை இருந்தால் மண்ணெண்ணெய் தடவித் தலை மயிரை வாரி, சோப்புப் போட்டுச் சுத்தம் செய்து கொள்ளுங்கள்.

6. வெளியிடங்களுக்குப் போய் வந்ததும் கை, கால், முகம் இவைகளைக் கழுவிச் சுத்தம் செய்து கொள்ளுங்கள். கண்களில் பீளை சேர விடாமல் அடிக்கடி சுத்தமான நீரால் கண்களைத் துடைத்துக் கொள்ளுங்கள்.

7. கை, கால்களில் நகங்களை வளர விடாதீர்கள். நகங்களை வளரவிட்டால் நகங்களின் இடுக்குகளில் அழுக்கு சேர்ந்து நகச்சுற்று உண்டாகும். சாப்பிடும் பொழுது கையில் நகங்களுக்கு இடுக்கிலுள்ள அழுக்கு உணவுடன் கலந்து உணவை அசுத்தப்படுத்தும். நகங்களை ஒரு பொழுதும் கடிக்கக் கூடாது. நகங்களைக் கடிப்பது கெட்ட வழக்கம். தவிர, நகங்களிலுள்ள அழுக்கு உமிழ் நீருடன் சேர்ந்து தேக சுகத்தைக் கெடுக்கும்.

8. 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்பது பழமொழி. ஒவ்வொருவரும் தத்தம் ஆடைகளை நன்றாகத் துவைத்து உலர்த்திக் கட்டி வர வேண்டும். ஆடைகளிலுள்ள அழுக்கு நீங்கச் சோப்புப் போட்டுக் கொள்ளலாம். சில தினங்களுக்கு ஒரு முறை சலவைக்குப் போட்டுச் சுத்தம் செய்து கொள்ளலாம். அவரவர் ஆடைகளை அவரவர் துவைத்துக் கொள்வதே மிகவும் நல்லது. தவிர, அவ்விதம் துவைப்பது உடற்பயிற்சியும் ஆகும்.

9. சுத்தமாக இருப்பவன் நோயில்லாமல் இருப்பான்; சந்தோஷமாக இருப்பான். பிறரும் அவனை மதிப்பார்கள்.

10. பிள்ளைகளே! அசுத்தமானவர்களைக் கண்டால் அவர்களுக்குத் தேக சுத்தத்தின் அவசியத்தை எடுத்துச் சொல்லுங்கள். அவர்கள் தேக சுத்தத்துடன் இருப்பதற்கு உதவி செய்யுங்கள்.

## கேள்விகள்

1. பற்களை ஏன் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்?

2. தலைமயிரிலுள்ள பேன், ஈர் இவைகளை ஒழிப்பது எப்படி?

3. உடம்பிலுள்ள அழுக்கைப்போக்க என்னென்ன பொருள்களை உபயோகிக்கலாம்?

## அப்பியாசம்

சீயக்காய் — பொருளின் பெயர்.

பையன் — " "

ஆடை — " "

காலை — காலப் பெயர்.

சீயக்காய், ஆடை, பையன், காலை-இந்தச் சொற்கள் பெயர்ச் சொற்கள்.

இவைபோன்ற பெயர்ச் சொற்களை எழுது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 1949
MADRAS



## 4. இருதலை மணியன்

| | | |
|---|---|---|
| எளிதில் | வழக்கப்படி | முக்கியம் |
| விவாதம் | உண்மை | குழி |
| நகர | சுற்றிக்கொண்டது | இருந்தது |
| உடம்பு | முழுவதும் | வெட்கம் |
| முன்பக்கம் | பின்பக்கம் | நெருப்பு |

1. பாம்புகளில் பல வகைகள் உண்டு. அவைகளில் இருதலை மணியன் என்பது ஒரு வகைப் பாம்பு. அந்தப் பாம்பின் முன் பக்கமும் பின் பக்கமும் ஒன்றுபோல இருக்கும். அதனால் இது முன்பக்கம், இது பின்பக்கம் என்று எளிதில் அறிய முடியாது. இரண்டும் தலை என்றே சொல்லப்படும். ஆனாலும கண்கள் முன் பக்கத்தில் மாத்திரம் உண்டு. இந்தப் பாம்பை மண்ணுண்ணிப் பாம்பு என்று சொல்லுவது வழக்கம்.

2. ஒரு நாள் இந்தப் பாம்பின் இரண்டு தலைகளுக்கும் விவாதம் உண்டாயிற்று. உண்மையான தலை, "நான் தான் முன் செல்வேன்" என்றது. பின்புறம் உள்ள தலை, "நான் தான் முன் செல்வேன்" என்றது. ஆனாலும் பாம்பு வழக்கப்படி உண்மையான தலையை முன் வைத்துப் போய்க்கொண்டிருந்தது. இதனால் உண்மைத் தலை, "நான் தான் முக்கியம்" என்று சொல்லிற்று.

3. இது பின்புறம் உள்ள தலைக்கு வெட்கமாய் இருந்தது. ஒரு சமயம் அந்த இருதலை மணியன் ஒரு மரத்து வேரைக் கடந்து போய்க்

கொண்டிருந்தது. அப்பொழுது பின்புறம் உள்ள தலை அந்த வேரை நன்ருய்ச் சுற்றிக்கொண்டது. பாம்பினுல் நகர முடியவில்லை. அதன்மேல் அந்தப் பாம்பு, "முன் புறம் உள்ள உண்மைத் தலையை விடப் பின்புறம் உள்ள தலையே முக்கியம்" என்று எண்ணிற்று.

4. இருதலை மணியன் அன்று முதல் பின் புறத்துத் தலையை முன்னுகச் செலுத்திப் போய்க் கொண்டிருந்தது. உண்மையான தலை தனக்கு ஏற்பட்ட கேவலத்தை எண்ணி எண்ணி மனம் வருந்தியது என்ன செய்வது! பாம்பின் எண் ணப்படி அல்லவா தான் நடக்க வேண்டும்?

5. ஒரு நாள் பாம்பு தன் புது வழக்கப்படி பின்புறம் உள்ள தலையை முன் வைத்துப் போய்க் கொண்டிருந்தது. காட்டில் ஒரு சிறு குழியில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. பின்புறமுள்ள தலைக்குக் கண் இல்லை அல்லவா? நெருப்பு எரி வதை அறியாமல் பாம்பு அந்தக் குழியில் விழுந்து விட்டது. நெருப்பு உடம்பு முழுவதும் பற்றப் பாம்பு இறந்தது.

தகுதி அறிந்து எதையும் ஆலோசித்துச் செய்ய வேண்டும்.

### கேள்விகள்

1. இருதலை மணியன் என்பது என்ன?
2. எதனுல் அதற்கு அப்பெயர் வந்தது?
3. இருதலை மணியன் தலைகளுக்குள் வந்த விவாதம் என்ன?

### அப்பியாசம்

சரியான சொற்களைச் சேர் :—

| | |
|---|---|
| மரத்தின் | தலை |
| பாம்பின் | குழி |
| நெருப்பு | வேர் |
| நான் | சொல்லிற்று |
| தலை | சொல்வேன் |



## 5. நிலாப் பாட்டு

| | | |
|---|---|---|
| வெண்ணிலா | வாரி | வீறு |
| புள்ளி மான் | ஜோதி | ஆரவாரம் |
| துள்ளுதல் | வீரம் | சிந்து |
| தெம்மாங்கு | குந்துதல் | சந்து |

அண்ணா ஓடிவா !
வெண்ணி லாவிலே,
புள்ளி மானைப்போல்
துள்ளி ஆடலாம். 1

பாலை வாரியே
லோகம் எங்குமே
வீசினால் என
ஜோதி வீசுதே ! 2

வீரம் பொங்குது!
வீறு கொள்ளுது
ஆரவாரமாய்ப்
பாடி ஆடுவோம். 3

இந்த வேளையில்
எந்தப் பிராணி தான்
சந்து தேடிப் போய்க்
குந்தித் தூங்குமே; 4

சிந்து பாடுவோம்!
தெம்மாங்கு பாடுவோம்!
தந்தனத் தானா;
தான தனனா! 5

## கேள்விகள்

1. நிலாவிலே சிறு பிள்ளைகள் என்னென்ன செய்கிறார்கள்?

2. நிலா வீசுவது எதுபோல் இருக்கிறது?

3. நிலாவைக் கண்டதும் சிறுவர் உற்சாகத்தில் என்ன செய்கிறார்கள்?

## அப்பியாசம்

1. கீழ்க்கண்ட பதங்களை உபயோகித்து வாக்கியம் எழுது:—
ஜோதி வீசுதல், புள்ளிமான், சிந்து பாடு.

2. பின்வரும் பெயர்கள் இன்ன பெயர் என்று எழுது:—
பிராணி, வேளை, பால், புள்ளிமான், சந்து, லோகம், நிலா, அண்ணன்.

3. சரியான சொற்களைச் சேர்:—

| | |
|---|---|
| நிலாவின் | பொங்குது |
| சிந்து | தூங்கும் |
| பிராணி | பாடுவோம் |
| வீரம் | ஜோதி |



## 6. அறிவுள்ள நாய்

| | | |
|---|---|---|
| உத்தியோகஸ்தர் | முக்கியமான | தொந்தரவு |
| மகிழ்ச்சி | ஈடுபட்டிரு | துப்பாக்கி |
| இளைப்பாறி | நோக்கம் | தற்சமயம் |
| கூடாரம் | அவசரம் | சிகிச்சை |

1. ஒரு காலத்தில் ஓர் உத்தியோகஸ்தர் ஒரு நாயை வளர்த்து வந்தார். அவருக்கு அந்த நாயினிடத்தில் அதிக அன்பு உண்டு. அவர் அதை நன்றாகப் பழகி இருந்தார். அது அவர் விரும்புகிற படி நடந்து அவருக்கு மகிழ்ச்சியை உண்டாக்கியது. அவர் வேலை செய்துகொண்டு இருக்கும் பொழுது அது சிறிது தூரத்திலிருந்து விளையாடிக் கொண்டிருக்கும். வேலையை முடித்து அவர் இளைப்பாறிக் கொண்டிருக்கும் பொழுது அது வாலை ஆட்டிக் கொண்டு வந்து அவரோடு விளையாடும்.

2. உத்தியோகஸ்தர் ஒரு சமயம் அயலூருக்குச் சென்றார். அங்கே காட்டுப் பக்கத்தில் ஒரு கூடாரம் அமைத்துக் கொண்டு தங்கினர்.

நாயும் அவரோடு போயிருந்தது. அவர் தமக்கு நல்ல பால் வேண்டும் என்று பசுவையும் கொண்டு போயிருந்தார். அஃது ஒரு மரத்தின் கீழே மேய்ந்து கொண்டிருந்தது.

3. பசு மேய்ந்து கொண்டிருக்கும் பொழுது ஒரு பாம்பு பளிச்சென்று படமெடுத்துச் சீறிக் கொண்டு அதைக் கடிக்க வந்தது. அதைப் பார்த்த நாய் கூடாரத்திற்குச் சமீபத்தில் இருந்த உத்தியோகஸ்தர் முன் ஓடிச் சென்று பலமாகக் குரைத்தது. அச்சமயம் அவர் ஒரு முக்கியமான வேலையில் ஈடுபட்டிருந்தார். அதனால் நாய் குரைத்ததைக் கவனிக்கவில்லை. உடனே அஃது அவர் மேல் விழுந்து வேலை செய்யவிடாமல் அவரைத் தடுத்தது. நாயின் நோக்கத்தை அவர் தெரிந்து கொள்ளவில்லை. அவசரமான வேலைக்கு மத்தியில் அது தொந்தரவு செய்ததற்காக அவர் பெருங் கோபம் கொண்டார். உடனே தம் கைத் துப்பாக்கியால் நாயைச் சுட்டுவிட்டார்.

4. பிறகு அவர் தற்செயலாகப் பசு மேய்ந்து கொண்டிருந்த இடத்தை நோக்கினர். அது கீழே விழுந்து துடித்துக் கொண்டிருந்தது. உத்தியோகஸ்தர் ஓடிப்போய்ப் பார்த்தார்; பாம்பு கடித்து விட்டதென்று தெரிந்து கொண்டு தக்க சிகிச்சை செய்தார். பசு பிழைத்துக் கொண்டது. அப் பசுவின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவே, நாய் தம்மைத் தொந்தரவு செய்தது என்று அவர் அறிந்து கொண்டார்; ஆராயாமல் நாயைக் கொன்றதற்காக மிகவும் வருந்தினர்.

### கேள்வி

படத்தைப் பார்த்துக் கதை சம்பந்தமாக ஐந்து வாக்கியங்கள் சொல்லு.

### அப்பியாசம்

உத்தியோகஸ்தர், கூடாரம், நோக்கம், தொந்தரவு, தற்செயலாக—இந்த வார்த்தைகளை உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.



## 7. நரியும் மத்தளமும்

| | | |
|---|---|---|
| பசி | சத்தம் | தாழ்ந்த |
| இரை | இரவு வேளை | காற்று |
| வெகு தூரம் | பயம் | அறிந்து |
| அலைந்து | பதுங்கி | கோபம் |
| திரிந்து | கடும்பசி | குதி குதித்து |
| தோல் | கிழிந்து | வருந்தி |

1. காட்டில் ஒரு நரி ஒரு நாள் பசியால் வருந்தி இரை தேடப் புறப்பட்டது. பல இடங்களிலும் இரை அகப்படாததால், அது வெகு தூரம் அலைந்து திரிந்தது.

2 கடைசியாக அது ஒரு தோட்டத்தைக் கண்டு, 'இங்கே இரை கிடைக்கும்' என்று நினைத்தது.

3 அப்பொழுது தோட்டத்தில் 'டம டமா' என்ற ஒரு சத்தம் கேட்டது. இரவு வேளையாக

இருந்ததால், நரி நடுங்கிப் போயிற்று. 'டமடமா டமடமா!' என்ற சத்தம் அடிக்கடி கேட்டது. இதனால் நரிக்குப் பயம் அதிகம் ஆயிற்று.

4. அது ஓர் இடத்தில் இரவு முழுதும் பதுங்கிக் கொண்டு இருந்தது. பொழுது விடிந்த வுடன் நரி தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தது; அப்பொழுது அதற்குக் கடும்பசியாக இருந்தது.

5. ஒரு மரத்தின் தாழ்ந்த கிளையில், மத்தளம் ஒன்று தொங்கிக்கொண்டு இருந்தது. காற்று வீசும் போதெல்லாம், மரக்கிளை மத்தளத்தில் பட்டது. இதனால்தான் அடிக்கடி சத்தம் உண்டாயிற்று என்று நரி அறிந்து கொண்டது.

6. உடனே நரிக்குக் கோபம் உண்டாயிற்று. ஒரு குதி குதித்து, மத்தளத்தின் தோலைக் கடித்து இழுத்தது. இதனால் அத்தோல் கிழிந்து போயிற்று. பிறகு சத்தம் கேட்கவில்லை.

7. பிள்ளைகளே! நாம் வெறுஞ் சத்தத்தைக் கேட்டுப் பயப்படலாகாது.

### கேள்விகள்

1. நரி தோட்டத்தில் என்ன சத்தத்தைக் கேட்டு நடுங்கியது?

2. நரி விஷயத்தைத் தெரிந்து கோபப்பட்டபோது அது என்ன செய்தது?

### அப்பியாசம்

கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்.

1. இங்கே இரை கிடைக்கும் —— நினைத்தது.

2. அப்பொழுது தோட்டத்தில் —— என்ற ஒரு சத்தம் கேட்டது.

## 8. கிராம வாழ்க்கை

| | | |
|---|---|---|
| உள்ளன | கிராமத்தார் | பெரும்பாலானவை |
| கூரை | வேயப்பட்டு | சிற்சில |
| போதிப்பது | மக்கள் | விவசாயி |
| புன்செய் | ஆங்காங்கு | சாகுபடிசெய் |
| உழைப்பது | அவசியமான | ஏராளமாக |
| சேகரிப்பர் | மனை | நாள்தோறும் |

1. எங்கள் ஊர் ஒரு சிறு கிராமம். எங்கள் கிராமத்தின் பெயர் புத்தூர். அதில் பத்துப் பன்னிரண்டு தெருக்கள் உள்ளன. ஒரு தெருவில் நாலைந்து கடைகள் இருக்கின்றன. அக்கடைகளில் கிராமத்தார் தங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொள்வார்கள்.

2. எங்கள் ஊரிலுள்ள வீடுகளில் பெரும்பாலானவை சிறிய வீடுகளே. அவை மண்ணால் சுவர்கள் எழுப்பப்பட்டு பனையோலை அல்லது சோளத்தட்டையால் கூரை வேயப்பட்டுள்ளன. சிற்சில வீடுகளின் கூரைகளுக்கு ஓடுகள், துத்தநாகத்தகடுகள் இவைகளைப் போட்டிருக்கிறார்கள்.

3. எங்கள் ஊரில் ஒரு சிறு பள்ளிக்கூடம் இருக்கிறது. அதில் அநேக சிறுவர்களும் சிறுமிகளும் படித்து வருகிறார்கள். எங்கள் பள்ளிக்கூடத்தில் ஐந்து வகுப்புகள் இருக்கின்றன. இரண்டு உபாத்தியாயர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். பள்ளிக்கூடத்தில் தமிழ், கணக்கு, சுகாதாரம் முதலிய பாடங்கள் போதிப்பதுடன் நூல்நூற்கவும் பனை ஓலையால் பெட்டிகள் முடையவும் கற்பிக்கிறார்கள்.

4. எங்கள் கிராமத்து மக்களில் பெரும்பாலோர் விவசாயிகள். எங்கள் கிராமத்தை யடுத்து புன்செய் நிலங்களும், மேய்ச்சல் தரைகளும்

உள்ளன. புன்செய் நிலங்களில் கம்பு, சோளம், கேழ் வரகு, காய்கறி வகைகள் முதலியன பயிரிடுகிறார்கள். இப் பயிர்களுக்குக் கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைத்துப் பாய்ச்சுகிறார்கள். ஆங்காங்கு சிற்சில இடங்களில் பருத்தியும் சாகுபடியாகிறது. இப் பயிருக்கு அவ்வப்போது பெய்யும் பருவ மழையே போதுமானது.

5. புன்செய் நிலங்களில் பயிரிடும் விவசாயி களுக்கு அநேகமாக வருஷம் முழுவதும் வேலை யிருந்து கொண்டே இருக்கும். ஆதலால் எங்கள் ஊரிலுள்ள விவசாயிகள் வருஷ முழுவதும் உழைத்து வருகிறார்கள். விவசாயத் தொழிலுக்கு அவசியமான மாடுகளையும் ஆடுகளையும் விவசாயி கள் வளர்த்து வருகிறார்கள். அவை ஊரையடுத் துள்ள மேய்ச்சல் தரைகளில் மேய்ந்து வரும்.

6. எங்கள் ஊர் ஜனங்களுக்குச் சோளம், கம்பு, முதலியன முக்கியமான உணவுப் பொருள்கள். சிற் சில தினங்களில் அரிசியையும் உபயோகிப்போம். காய்கறிகள், பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் இவை எங்களுக்கு ஏராளமாகக் கிடைக்கும்.

7. எங்கள் ஊரில் தச்சுவேலை செய்வோர், இரும்பு வேலை செய்வோர், மண் பாண்டங்கள் செய்வோர், துணி நெய்வோர் சிலர் உண்டு எங்கள் ஊரையடுத்துப் பருத்தி சாகுபடியாவதால் பருத்திக் காய்கள் முற்றி வெடிக்கும் காலத்தில் பெண்டிர் பலர் பருத்தியைச் சேகரிப்பர். அதை மணையி லிட்டு அரைத்துக் கொட்டை வேறு பஞ்சு வேருகப் பிரிப்பார்கள். எங்கள் ஊரில் பலருக்கு ராட்டையில் நூல் நூற்கத் தெரியும். அவர்கள் தாம் நூற்கும் நூலைத் துணி நெய்பவர்களிடம் கொடுத்துத் தமக்கு வேண்டிய துணியை வாங்கிக் கொள்வார்கள். பருத்தி ஆடையையே எல்லோரும் உடுக்கிறார்கள்.

கிராம வாசிகளுக்கு அதிகமான உடைகள் தேவை யில்லை.

8. எங்கள் ஊரை நாங்கள் சுத்தமாக வைத்துக் கொள்கிறோம். தெருக்களில் குப்பை, கூளங்களைச் சேர விடமாட்டோம். பள்ளிக்கூடத்து மாணவ மாணவிகளாகிய நாங்களும் உபாத்தியாயர்களும் ஊராரில் சிலரும் வாரத்திற்கு ஒருமுறை ஊரில் அங்கங்கே சேர்ந்த குப்பைகளை எடுத்துக் குழி களில் போட்டுப் புதைத்து விடுவோம். தவிர, ஊரைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றியும் முறையைப் பற்றியும் நாங்கள் ஊராருக்கு எடுத்துச் சொல்வோம்.

9. எங்கள் ஊரிலிருந்து மூன்று மைல் தூரத்தி லுள்ள ஓர் ஊரில் தபாலாபீசு இருக்கிறது. அவ்வூர் ஒரு ரயில்வே ஸ்டேஷனையடுத்து இருக்கிறது. அவ்வூரிலிருந்து நாள்தோறும் தபால்காரர் ஒருவர் தபால்களைக் கொண்டுவந்து கொடுப்பார். எங்கள் ஊர் தபால் பெட்டியில் சேரும் கடிதங்களைத் தபா லாபீசுக்கு எடுத்துச் செல்வார்.

10. எங்கள் ஊரில் ஒரு சிறு கோயில் உண்டு. அதில் சிற்சில சமயங்களில் திருவிழாக்கள் கொண் டாடப்படும். அக்காலங்களில் ஜனங்கள் மிகவும் சந்தோஷமாகப் பொழுது போக்குவார்கள்.

### கேள்விகள்

1. கிராமப் பள்ளிக்கூடத்தில் என்னென்ன போதிக்கப் படுகின்றன?
2. விவசாயிகள் என்னென்ன பயிரிடுகிறார்கள்?
3. கிராமத்தில் என்னென்ன தொழில்கள் நடைபெறுகின்றன?

### அப்பியாசம்

கீழே கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை எழுதிப் பூர்த்தி செய்:—

1. எங்கள்——ஒரு——கிராமம்.
2. கிராமத்தாரின்——தொழில்——
3. ——கிராமத்தில்——தெருக்கள்——.



## 9. சிநேகத்தின் உயர்வு

| | | | |
|---|---|---|---|
| அடிமை | வேதனை | ஜாக்கிரதை | தண்டனை |
| கொடுமை | மெல்லிய | காயம் | பட்டினி |
| எஜமானன் | நடுநடுங்கினான் | வேடர்கள் | பயங்கரம் |
| இம்சித்து | வீக்கம் | வெகுமதி | கர்ஜித்து |
| குகை | பரிதாபம் | உத்தரவு | சந்தோஷம் |
| கூர்மை | சக்தி | கைதி | ஆச்சரியம் |

1. ஒரு காலத்தில் ஒரு பிரபு இருந்தார். அவருடைய அடிமைகளில் ஒருவன் சாந்தன் என்பவன். அக்காலத்தில் அடிமைகளை மிகவும் கொடுமையாக நடத்திவந்தார்கள். சாந்தனுடைய எஜமானர் அவனை அதிகமாக இம்சித்து வந்தார். சாந்தன் இம்சை பொறுக்க முடியாமல் ஒரு நாள் இரவில் ஒருவருக்கும் தெரியாமல் காட்டில் புகுந்து குகை ஒன்றில் ஒளிந்துகொண்டான்.

2. மறுநாள் அவன் குகையிலிருந்து வெளி வந்ததும், குகைக்கு அருகில் ஒரு சிங்கம் படுத்திருப்பதைக் கண்டான். அதன் காலில் கூர்மையான முள் ஒன்று தைத்திருந்தது. அது அந்தக் காலை மேலே தூக்கிக்கொண்டு வேதனை பொறுக்க

முடியாமல் மெல்லிய குரலில் கதறிக் கொண் டிருந்தது.

3. சாந்தன் முதல் முதல் சிங்கத்தைக் கண்ட தும் மிகவும் அஞ்சி நடுங்கினன். பிறகு சிங்கத்தின் காலிலுள்ள முள்ளையும் வீக்கத்தையும் கண்டு பரிதாபம் கொண்டான். உயிரை வெறுத்திருந்த தால், அவன் உடனே துணிந்து சிங்கத்தின் அருகே சென்றான். அது எழுந்திருக்கவும் சக்தியில்லாமல் கிடந்தது. சாந்தன் அதன் காலை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, முள்ளை ஜாக்கிரதையாகப் பிடுங்கினன். காயத்தைச் சுத்தம் செய்து தன் ஆடையில் ஒரு பாகத்தைக் கிழித்துக் காலில் கட்டினன்.

4. கஷ்டம் நீங்கியவுடன், சிங்கம் அவன் கையை நக்கித் தன் நன்றியைத் தெரிவித்தது. அதுமுதல், சாந்தனும் சிங்கமும் சிநேகமாய் அந்தக் குகையில் வசித்து வந்தார்கள்.

5. இப்படி இருக்கையில் ஒரு நாள் சில வேடர்கள் அந்தச் சிங்கத்தை உயிரோடு பிடித்து அந்த நாட்டு அரசனுக்கு வெகுமதியாகக் கொடுத் தார்கள். அரசன் சிங்கத்தை ஒரு கூட்டில் அடைத்து வைக்கும்படி உத்தரவு செய்தான். பிறகு சாந்தனும் கைதியானன். அவன் தப்பி ஓடின அடிமை. இவனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று அவனுடைய எஜமானர் அரசனை வேண்டிக்கொண்டார்.

6. சிங்கத்தைச் சில நாள் பட்டினியாக வைத்திருந்து, இந்த அடிமையை அதற்கு இரை யாக்க வேண்டும் என்று அரசன் தீர்ப்புச் செய் தான். குறித்த தினத்தில் அரசனும் உத்தியோ கஸ்தர்களும் கூடியிருந்தார்கள். பசியோடு கூட் டிலிருந்த சிங்கம் பயங்கரமாகக் கர்ஜித்தது. கூட்டின் கதவைத் திறந்ததும், அது சாந்தன்

நின்று கொண்டிருந்த இடத்திற்குப் பாய்ந்து வந்தது

7. என்ன ஆச்சரியம்! சிங்கம் தனக்கு உதவி செய்த சாந்தனை நன்றாய்த் தெரிந்து கொண்டது. உடனே அது தன் அன்பையும் சந்தோஷத்தையும் வெளியிடுவது போல அவனுடைய கையை நக்கியது. அப்போது சாந்தன் அதைத் தடவிக் கொடுத்தான். பிறகு அவன் அரசனை நோக்கி, "இந்த மிருகராஜா என்னுடைய சிநேகிதன். இதைத் தவிர எனக்கு வேறு சிநேகிதன் இல்லை" என்று சொன்னான்.

8. அரசன் முதலானவர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். பிறகு, அவர்கள் சாந்தனிடம் நடந்த விஷயத்தை விசாரித்து அறிந்து கொண்டார்கள். "சிநேகிதத்தை மறவாத சிங்கமும், அதற்கு ஆபத்தில் உதவிய நேசனும் உடனே விடுதலை அடைய வேண்டும்" என்று அரசன் உத்தரவு செய்தான்.

### கேள்விகள்

1. சாந்தன் காட்டுக்குப் போகக் காரணம் என்ன ?
2. சாந்தனுக்கும் சிங்கத்திற்கும் சிநேகம் ஏற்பட்டது எதனால்?
3. சாந்தனுக்கு விடுதலை எப்படிக் கிடைத்தது ?

### அப்பியாசம்

1. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக அமைக்க:-

   சிங்கம் கையை நன்றியைத் நக்கி சாந்தன் தெரிவித்தது.

   சாந்தன் தடவிக் அப்போது கொடுத்தான். அதைத்

2. கோடிட்ட இடங்களில் தகுதியான சொற்களை அமைக்க:—

   வேடர்கள் சிங்கத்தை — பிடித்து அந்த நாட்டு அரசனுக்கு — கொடுத்தார்கள்.

   கூட்டின் —— திறந்ததும் சிங்கம் —— நின்று கொண்டிருந்த இடத்திற்கு —— வந்தது.

## 10. உண்மை சொன்ன சிறுவன்

| | | |
|---|---|---|
| பிரியமாக | திறமை | பதுமை |
| விசேஷமாக | வெளிப்படுத்தி | துஷ்டத்தனம் |
| மதித்து | சக்தி | அஜாக்கிரதை |
| தண்டிப்பார்கள் | காரணம் | விம்மி விம்மி |
| யோசித்தான் | பொருத்தம் | அகம் |
| பிராணி | போற்றி | ஈடு |
| பழி | ஏமாற்றுவது | கருத்து |
| சுமத்துவது | சிந்தனை | பலமுறை |
| நியாயம் | கலக்கம் | அமிர்தம் |

1. சென்னையில் சாமுவேல் என்ற ஒரு பையன் இருந்தான். அவன் பெற்றோர்கள் ஒரு பூனையைப் பிரியமாக வளர்த்து வந்தார்கள். சாமுவேல் அடிக்கடி பூனையோடு விளையாடுவது வழக்கம். ஒரு நாள் சாமுவேல் பூனையோடு விளையாடிக் கொண்டிருக்கும்போது, அவன் கைபட்டு ஓர் அழகிய பதுமை கீழே உருண்டு விழுந்து உடைந்து போயிற்று.

2. அப்பொம்மை மிக அழகாகவும், விலை உயர்ந்ததாகவும் இருந்ததால், சாமுவேலின் தாய் தந்தையர் அதை விசேஷமாக மதித்து வந்தார்கள். எனவே, நடந்ததை அவர்கள் அறிந்து கொண்டால், தன்னைத் தண்டிப்பார்கள் என்று சாமுவேல் அஞ்சினான்.

3. முதலில் அவன், அப்பொம்மையைப் பூனை உடைத்து விட்டது என்று சொல்லித் தான் தப்பிக்கொள்ளலாமா என்று யோசித்தான். பிறகு அந்த வாயில்லாப் பிராணி மீது பழியைச் சுமத்துவது நியாயமாகாது என்று நினைத்தான். 'பூனைக்குப் பேசும் திறமையிருந்தால், அது உண்மையை வெளிப்படுத்தி என்னைப் பொய்யனென்று காட்டிவிடுமே! அவ்விதச் சக்தி அதற்கு

இல்லை என்ற காரணத்தைக் கொண்டு நான் பொய் சொல்லுவது பொருத்தமுடையதாகுமா? என்னைப் பொன்போல் போற்றி வளர்க்கும் பெற்றோரை ஏமாற்றுவதுதான் எவ்வாறு பொருந்தும்? என்று சாமுவேல் பலவிதமாகச் சிந்தனை செய்து, ஒருவித முடிவிற்கும் வராமல் கலக்கம் அடைந்திருந்தான்.

4 இந் நிலையில் சாமுவேலின் தந்தையும் தாயும் வெளியிலிருந்து வீட்டிற்குள் வந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் சாமுவேல் அழுது புலம்பினான். "நான் பூனையோடு விளையாடிக் கொண்டிருந்தேன்; அப்பொழுது இந்தப் பதுமை உடைந்துபோயிற்று" என்று அவன் கதறி அழுது கொண்டே, தன் தாயை நோக்கிச் சொன்னான். அவள், "ஐயோ! இப்பதுமை விலை உயர்ந்த பொருள் ஆயிற்றே! இது எவ்வளவு அழகாக இருந்தது! இதை இந்தப் பூனை உடைத்து விட்டதா? இந்தத் துஷ்டப் பூனையை நாம் இன்று தண்டிக்க வேண்டும்" என்றாள்.

5. உடனே சாமுவேல், "அம்மா, நான் அப் படியே சொல்லித் தப்பிக்கொள்ளலாம் என்று முதல் முதல் நினைத்தேன். ஆனால் அது உண்மை யன்று. நான் அஜாக்கிரதையால் இந்த அருமை யான பதுமையை உடைத்துவிட்டேன். அப்படி யிருக்கப் பேசத்தெரியாத அந்த ஏழைப் பிராணி யின் மேல் நான் ஏன் வீண் பழி சுமத்தவேண்டும்? இந்த விலையுயர்ந்த பொம்மை உடைந்ததற்கு என் னுடைய விளையாட்டுப் புத்திதான் காரணம்" என்று சொல்லிக்கொண்டே விம்மி விம்மி அழுதான்.

6. சாமுவேலின் பெற்றோர்கள் தங்கள் அருமை மகன் தைரியமாக உண்மை பேசியதைக் குறித்து அகமகிழ்ந்தார்கள். "அப்பா மகனே! இப்படிப்பட்ட பதுமைகள் நூற்றுக்கணக்காக

உடைந்தாலும் குற்றமில்லை. இந்தப் பதுமை எவ்வளவு விலை உயர்ந்ததாயினும் நீ சொன்ன உண்மைக்கு ஈடாகுமா? விலை உயர்ந்த பொருள்களில் எல்லாம் அதிக விலை உயர்ந்தது உண்மையேயாகும்" என்று தகப்பனார் சாமுவேலை நோக்கிக் கூறி அவனை உற்சாகப்படுத்தினர். தாயோ தன் கருத்தை வெளியிடாமல், மகனது கண்ணீரைத் துடைத்து, அவனைப் பலமுறையும் முத்தமிட்டுக் கொண்டாள். அன்னையின் முத்தம் அமிர்தத்திலும் சிறந்ததல்லவா?

### கேள்விகள்

1. பதுமை உடைந்து போனதற்குக் காரணம் யாது?
2. சாமுவேல் தன் குற்றத்தை மறைத்து விடலாமென்று ஏன் முதலில் எண்ணினன்?
3. முடிவில் அவன் செய்ததென்ன?
4. அதனல் அவன் அடைந்த நன்மை யாது?

### அப்பியாசம்

1. பூனை, பதுமை, பிராணி, தாய், தந்தை, சாமுவேல்—இந்த ஆறு பெயர்களில் தாய், தந்தை, சாமுவேல் இவை மனிதர்களைக் குறிக்கும் பெயர்கள். ஆகையால் இவை உயர்திணைப் பெயர்கள். மற்ற மூன்றும் அஃறிணைப் பெயர்கள்

2. நீ வேறு ஐந்து உயர்திணைப் பெயர்களும், ஐந்து அஃறிணைப் பெயர்களும் எழுது.

3. இரண்டு பத்திகளிலுள்ளவற்றில் பொருத்தமானவைகளைச் சேர்:—

| | |
|---|---|
| சாமுவேலின் பெற்றோர்கள் | நாம் இன்று தண்டிக்க வேண்டும். |
| சாமுவேலின் கைபட்டு | அவனை உற்சாகப்படுத்தினர். |
| இந்தத் துஷ்டப் பூனையை | பதுமை கீழே விழுந்தது. |
| விலை உயர்ந்த பொருள்களில் எல்லாம் | ஒரு பூனையை வளர்த்தார்கள். |
| சாமுவேலின் தகப்பனர் | அதிக விலை உயர்ந்தது உண்மையே. |

4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகளை எழுது:—

பதுமை — விழுந்து உடைந்தது. (கீழே, மேலே)

சாமுவேல் — உண்மை சொன்னன். (பிரியமாக, தைரியமாக, அன்பாக)

சாமுவேல் விம்மி விம்மி — (ஓடினன், சிரித்தான், அழுதான்)




## 11. வண்ணாத்திப் பூச்சியின் சரிதம்

| | | |
|---|---|---|
| வர்ணங்கள் | ஒரே மாதிரி | வெவ்வேறு |
| ஒருவகை | மது | ஜீவிக்கும் |
| உறுப்பு | குழாய்வாய் | உறிஞ்சி |
| வெப்பம் | பொரிந்து | முழு வளர்ச்சி |
| பருவம் | விசித்திரமாக | இயற்கை |

1. வண்ணாத்திப் பூச்சியின் முட்டைகள், 2. கம்பளிப் புழு, 3. கூட்டுப் புழு, 4. வண்ணாத்திப் பூச்சி.

**சுந்தரி:** லீலா, நான் தோட்டத்திற்குப் போகிறேன். நீயும் வருகிறாயா?

**லீலா:** சரி, நானும் வருகிறேன். (இருவரும் தோட்டத்திற்குப் போகிறார்கள்.) அக்கா, அதோ ஒரு பூச்சி பறக்கிறது பார். அது எவ்வளவு அழகாக இருக்கிறது! அது என்ன பூச்சி, அக்கா?

**சுந்தரி:** தங்காய், அது வண்ணாத்திப்பூச்சி. அதன் இறக்கைகளில் பல வர்ணங்கள் காணப்படுகின்றன அல்லவா? ஆகையால்தான் அது அழகாகக் காணப்படுகிறது.

**லீலா:** அக்கா, அதோ ஒரு வண்ணாத்திப்பூச்சி பறக்கிறது! அது வேறு வர்ணங்களுடன் காணப்படுகிறதே!

**சுந்தரி:** ஆம், வண்ணாத்திப்பூச்சிகள் எல்லாம் நிறத்தில் ஒரே மாதிரியாக இரா; அவை வெவ்வேறு வர்ணங்களில் காணப்படும்

**லீலா:** அக்கா, அதோ பார். ஒரு வண்ணாத்திப் பூச்சி அந்தப் பூவில் தங்கியிருக்கிறது. அது அங்கே என்ன செய்கிறது?

**சுந்தரி:** லீலா, வண்ணாத்திப்பூச்சிக்கு வேண்டிய உணவு பூக்களில் இருக்கிறது. உணவை உட்கொள்ள அது அப் பூவில் தங்கியிருக்கிறது.

**லீலா:** பூக்களில் என்ன உணவு இருக்கிறது?

**சுந்தரி:** பூக்களில் தண்ணீர் போன்றதும் தித்திப்புள்ளதுமான ஒருவகை மது உண்டு. அந்த மதுவை வண்ணாத்திப்பூச்சிகள் குடித்து ஜீவிக்கும்.

**லீலா:** வண்ணாத்திப்பூச்சி பூக்களிலுள்ள மதுவை எப்படிக் குடிக்கும்?

**சுந்தரி:** வண்ணாத்திப் பூச்சியின் வாயில் நீண்ட குழாய்போன்ற ஓர் உறுப்பு உண்டு. அந்தக் குழாய் வாயின் உதவியால் வண்ணாத்திப் பூச்சி பூக்களிலுள்ள மதுவை உறிஞ்சிக் குடிக்கும். மற்றச் சமயங்களில் அது தன் குழாய் வாயைச் சுருட்டிக் கொள்ளும்.

**லீலா:** அக்கா, அதோ அந்த இலையில் சில புழுக்கள் இருப்பதைப் பார். அவை என்ன புழுக்கள்?

**சுந்தரி:** லீலா, அவை கம்பளிப் புழுக்கள். வண்ணாத்திப்பூச்சி இலைகளின் அடிப்பாகத்தில்

அநேக சிறு சிறு முட்டைகள் இடும். அந்த முட்டைகள் சூரிய வெப்பத்தால் பொரிந்து புழுக்களாகும். அந்தப் புழுக்கள் இலைகளைத் தின்று வளரும். புழு முழு வளர்ச்சியடைந்ததும் தன்னைச் சுற்றி மெல்லிய நூலால் கூடு கட்டிக்கொள்ளும். சில நாட்கள் அக் கூட்டினுள் அசைவற்று இருக்கும். அப்பொழுது அதைக் கூட்டுப் புழு என்பார்கள். இந்தப் பருவத்தில் அது ஆகாரம் உட்கொள்வதில்லை. சில நாட்களில் அந்தக் கூட்டுப் புழு வண்ணாத்திப்பூச்சியாக மாறிக் கூட்டை விட்டு வெளியே வந்து பறந்து செல்லும்.

**லீலா:** அக்கா, வண்ணாத்திப் பூச்சியின் பிறப்பு மிகவும் விசித்திரமாக இருக்கிறதே!

**சுந்தரி:** ஆம். இதுபோல் இயற்கையில் எத்தனையோ விசித்திரங்கள் இருக்கின்றன. நேரமாகிறது. வீட்டிற்குள் போவோம், வா.

### கேள்விகள்

1. வண்ணாத்திப் பூச்சியின் உணவு என்ன ?
2. அது எவ்விதம் உணவை உட்கொள்கிறது ?
3. கம்பளிப்புழு என்பது என்ன ?
4. வண்ணாத்திப் பூச்சியின் வளர்ச்சிப் பருவங்களைச் சொல்.

### அப்பியாசம்

1. அழகாக, ஒரே மாதிரியாக, உறிஞ்சி, வெளியே, வெவ்வேறு — இந்த வார்த்தை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்துச் சொல்.

2. வண்ணாத்திப்பூச்சி இலைகளின் அடியில் அநேக முட்டைகளை இடும். — இந்த வாக்கியத்தில் எத்தனை பெயர்ச் சொற்கள் இருக்கின்றன? அவை இன்ன திணை என்று சொல்.



## 12. பேராசைச் சிறுவன்

| | | |
|---|---|---|
| நீர்வளம் | கனமாய் | வழக்காடு |
| நிலவளம் | மேய்கிற | வழிப்போக்கன் |
| வெல்லம் | நிரம்ப | சமாசாரம் |
| பொதி | சமைத்து | விசாரித்தான் |
| வெருண்டு | வர்த்தகன் | சங்கதி |
| துள்ளிற்று | பல்லவி | உபாயம் |
| முயற்சி | உருண்டை | பயிரிடுதல் |

1. லக்ஷ்மீபுரம் என்பது நீர்வளமும் நிலவளமுமுள்ள சிறிய கிராமம். ஊரைச் சுற்றியுள்ள நான்கு பக்கங்களிலும் வயல்கள் உண்டு. அந்த வயல்களில் நெல்லும் கரும்பும் மிகுதியாகப் பயிரிடுவது வழக்கம். கரும்பிலிருந்து வெல்லம் உண்டாக்கி அவ்வூரார் விற்பார்கள்.

2. ஒரு நாள் முத்துச் செட்டியார் என்ற வர்த்தகன் ஒருவன் வெல்லத்தை விற்கப்

புறப்பட்டான். அவன் வெல்லப் பொதிகளைப் பத்து எருதுகளின் மேல் ஏற்றிக்கொண்டு வந்தான். இடைவழியில் ஒருவன் குடை பிடித்துக் கொண்டு எதிரே வந்தான். அவனைக் கண்டதும் அந்த எருதுகளில் ஒன்று வெருண்டு துள்ளிற்று. அதனால் அதன்மேல் இருந்த வெல்லப் பொதி கீழே விழுந்துவிட்டது. வர்த்தகன் அந்தப் பொதியை எருதின்மேல் ஏற்ற முயற்சி செய்தான். பொதி கனமாய் இருந்தபடியால் அவனால் முடியவில்லை.

3. அந்தச் சமயத்தில் மாடு மேய்க்கிற சிறுவன் ஒருவன் அவ்வழியே சென்றான். வர்த்தகன் அவனை அழைத்து, "தம்பி, இந்த வெல்லப் பொதியை என்னோடு ஒரு கை பிடித்து மாட்டின் மேல் ஏற்று, நான் உனக்கு நிரம்ப வெல்லம் தருகிறேன்" என்று வேண்டிக் கொண்டான். சிறுவனும், "நல்லது" என்று சம்மதித்துப் பொதியைத் தூக்கி மாட்டின்மேல் ஏற்றினான். வர்த்தகன் அச்சிறுவனுக்குத் தான் சொன்னபடி ஓர் உருண்டை வெல்லம் எடுத்துக் கொடுத்தான். சிறுவனோ, "இது கொஞ்சம், நிரம்ப வெல்லம் கொடு" என்றான். வர்த்தகன் பின்னும் கொஞ்சம் வெல்லம் கொடுத்தான். சிறுவன் "இது கொஞ்சந்தான். இன்னும் நிரம்பக் கொடு" என்றான். வர்த்தகன் கொடுக்கக் கொடுக்கச் சிறுவன், "இது கொஞ்சம், நிரம்பக் கொடு" என்று தன் பல்லவியைப் பாடிக்கொண்டே இருந்தான்.

4. இவ்வாறு சிறுவன் வர்த்தகனிடம் வழக்காடும்பொழுது அவ்வழியே சென்ற ஒரு வழிப்போக்கன், வர்த்தகனிடம் வந்து சமாசாரத்தை விசாரித்தான். வர்த்தகன் நடந்த சங்கதி முழுவதும் சொன்னான். உடனே வழிப்போக்கன் ஓர் உபாயம் பண்ணினான். அவன் ஒரு கையில்

கொஞ்சம் வெல்லமும், மற்ருெரு கையில் அதைக் காட்டிலும் சற்று அதிகமான வெல்லமும் எடுத்துக்கொண்டு, சிறுவனிடம் இரண்டையும் காட்டி, "இது எவ்வளவு? இது எவ்வளவு?" என்று கேட்டான். சிறுவன், "அது கொஞ்சம், இது அதிகம்" என்ருன். வழிப்போக்கன், "நன்று, இது அதிகமாய் இருக்கிறதால் நீ இதை வாங்கிக் கொண்டு போ" என்று சொன்ஞன். சிறுவன் வெட்கம் கொண்டு அதை வாங்கிக் கொண்டு போஞன்.

## கேள்விகள்

1. லக்ஷ்மீபுரத்தின் செழிப்பு எப்படிப்பட்டது?

2. முத்துச் செட்டியார் வெல்லம் விற்கப் போகும்பொழுது அவருக்கு ஏற்பட்ட கஷ்டம் என்ன?

3. அந்தக் கஷ்டம் எப்படி நிவர்த்தியாயிற்று?

4. சிறுவனுக்கும் செட்டியாருக்கும் ஏற்பட்ட வழக்கு யாது?

5. அந்த வழக்கை வழிப்போக்கன் எப்படித் தீர்த்தான்?

## அப்பியாசம்

1. வியாபாரி தான் சொன்னபடி சிறுவனுக்கு ஒரு உருண்டை வெல்லம் எடுத்துக் கொடுத்தான். — இதிலுள்ள பெயர்ச் சொற்களை எடுத்தெழுதி அவை இன்ன திணை என்று எழுது.

2. உயர்திணைப் பெயர் ஐந்தும் அஃறிணைப் பெயர் ஐந்தும் எழுது.

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை இட்டு எழுது:—

சிறுவன் — வெல்லம் — கொடு — தொந்தரவு — வழிப்போக்கன் — கையில் — மற்ருெரு — எடுத்துக் கொண்டு சிறுவனிடம் எது வேண்டும் — கேட்டான்.

4. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்கு:—

இது, வழிப்போக்கன், நீ, அதிகமாய், நன்று, இதை, போ, இருக்கிறதால், வாங்கிக்கொண்டு, சொன்ஞன், என்று.

வழக்கம், மிகுதியாகப், நெல்லும், வயல்களில், கரும்பும், அந்த, பயிரிடுவது.

## 13. உண்ணுதல்

| | | |
|---|---|---|
| உயிர்வாழ்வதற்கு | சோர்வு | சக்தி |
| நீக்கு | நாளடைவில் | பசி |
| சமயம் | ஜீரணம் | மென்று |
| உமிழ்நீர் | இரைப்பை | அமிர்தம் |
| அஜீர்ணம் | சத்துள்ள | ஆரோக்கியம் |
| பலஹீனம் | வழக்கம்போல் | எளிதில் |

1. பிள்ளைகளே! நாம் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியம். எந்தப் பிராணியும் உணவு இல்லாமல் ஜீவித்திருக்க முடியாது. ஒரு வேளை உணவு உட்கொள்ளாவிட்டால் சோர்வு ஏற்படுகிறது அல்லவா? நாம் உட்கொள்ளும் உணவு வேலை செய்வதற்கு வேண்டிய சக்தியை நமக்குக் கொடுக்கிறது; வேலை செய்யும்பொழுது தேகத்தில் ஏற்படும் குறைவை நீக்குகிறது.

2. உங்கள் உடம்பைத் தொட்டுப் பாருங்கள். சிறிது உஷ்ணமாயிருக்கிறது அல்லவா? நாம் உட்கொள்ளும் உணவு நமது தேகம் உஷ்ணமாய் இருக்கச் செய்கிறது.

3. சிறு குழந்தைகள் வளர்ந்து நாளடைவில் பெரியவர்கள் ஆகிறார்கள் அல்லவா? இவ்விதம் உடம்பு வளரவும் ஆகாரம் அவசியம் வேண்டும்.

4. 'பசித்துப் புசி' என்பது ஒரு பழமொழி. பசி ஏற்படும்போது தான் உண்ணுதல் வேண்டும். பசியாத சமயங்களில் புசிப்பது கூடாது. நமது தேகத்திற்கு எப்பொழுது உணவு அவசியம்

என்பதைப் பசி தெரிவிக்கிறது. நாம் தினந்தோறும் குறித்த வேளைகளில் புசித்து வந்தால் அவ்வேளைகளில் பசி ஏற்படும். இவ்விதம் பசி ஏற்படும் சமயங்களில் உணவு உட்கொண்டால் தான் அவ்வுணவு ருசியாக இருக்கும்; நன்றாகவும் ஜீரணம் ஆகும்.

5. நாம் உண்ணும்பொழுது அவசர அவசரமாக உண்ணக்கூடாது. உணவை நன்றாக மென்று உண்ணவேண்டும். அவ்விதம் நன்றாக உணவை மென்றால் அது உமிழ்நீருடன் நன்றாகச் சேரும்; நன்றாக ஜீரணம் ஆகும். உணவை ஜீரணம் செய்வதில் இரைப்பைக்கும் அதிக வேலை ஏற்படாது.

6. 'உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்.' ஆகையால், விருந்தினர்களுடன் சந்தோஷமாக உண்பது மிகவும் நல்லது.

7. பிள்ளைகளே! நீங்கள் ஒருபோதும் அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடக் கூடாது. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்'. எவ்வளவு ருசியான பொருளானாலும், அளவுக்கு அதிகமாக உண்ணாதீர்கள். அளவுக்கு மிஞ்சி உண்டால் அஜீரணம் உண்டாகும்.

8. நம்மில் பலர் அரிசியையும், மற்றும் பலர் சோளம், கோதுமை முதலியவைகளையும் முக்கிய உணவுப் பொருள்களாக உபயோகிக்கிறார்கள். நாம் ஒவ்வொருவரும் போதுமானபடி காய்கறிகள், கீரை வகைகள், பால், தயிர், நெய், பருப்பு வகைகள், பழ வகைகள் முதலியவற்றையும் உணவாகக் கொள்ளவேண்டும். இவ்விதம் பல வகையான

உணவுப் பொருள்கள் கலந்த உணவுதான் சத்துள்ள உணவு ஆகும். தேக ஆரோக்கியத்திற்குச் சத்துள்ள உணவு மிகவும் அவசியம்.

9 நோயுற்ற காலங்களில் உணவை ஜீரணம் செய்யும் உறுப்புகள் பலஹீனமடைந்து இருக்கும். அப்பொழுது சாதம் வழக்கம் போல் உண்டால் ஜீரணம் ஆகாது. ஆகையால் நோயுற்ற காலங்களில் வைத்தியர் கூறும் யோசனைப்படி எளிதில் ஜீரணமாகக் கூடிய கஞ்சி முதலியனதான் உட்கொள்ளலாம்.

## கேள்விகள்

1. நாம் ஏன் உண்ண வேண்டும்?
2. எச்சமயத்தில் உணவு கொள்ளவேண்டும்?
3. எப்படி உண்ணுதல் நல்லது?
4. ஏன் அளவுக்கு மிஞ்சி உண்ணுதல் கூடாது?
5. எவ்வித உணவு தேக ஆரோக்கியத்திற்கு அவசியம்?

## அப்பியாசம்

1. அழகாக = அழகு + ஆக. இதுபோலப் பின்வருபவைகளைப் பிரித்து எழுது:—

நோயுற்ற, தங்கியிருக்கிறது, அசைவற்று.

2. கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்:—

(அ) உண்டிக்கு ——— விருந்தோடு ——— .

(ஆ) பசித்துப் ——— .

(இ) அளவுக்கு ——— அமிர்தமும் ——— .



## 14 தாலாட்டு

அமுதம்
தெவிட்டாக்கனி
பைங்கிளி
சப்பாணி
புஞ்சிரிப்பு
திருமுகம்
இளவரசு
கைப்பாவை
சீமான்
திருக்குமாரன்
பணிகாரம்
கண்ணுறங்கு

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ

தெள்ளமுத முண்டு
தெவிட்டாக் கனியுண்டெடம்
உள்ளங் குளிர
உரையாடும் பைங்கிளியோ. 1

நெஞ்சிற் கவலையெலாம்
நீங்கத் திருமுகத்தில்
புஞ்சிரிப்பைக் காட்டி எம்மைப்
போற்றும் இளவரசோ. — 2

ஆரடித்தார் நீயழுதாய்
அடித்தாரைச் சொல்லியழு
சீரெடுத்தச் செல்வச்
சீமான் திருக்குமரா. 3

பாலை விரும்பினையோ
பணிகாரம் வேண்டினையோ
சோலைப் பசுங்கிளியே
சுந்தரமே சொல்லியழு. 4

சப்பாணி கொட்டித்
தளர்ந்தனையோ அல்லதுன்றன்
கைப்பாவைக் காகக்
கலங்கி அழுதனையோ. 5

தித்திக்கும் தேனும்
தினைமாவும் கொண்டுன்றன்
அத்தை வருவாள்
அழவேண்டாம் கண்மணியே. 6

மாங்கனியும் நல்ல
வருக்கைப் பலாக்கனியும்
வாங்கியுன் அம்மான்
வருவார் அழவேண்டாம். 7

**கண்ணுறங்கு கண்ணுறங்கு**
**கண்மணியே கண்ணுறங்கு**

சி.—தேசிகவிநாயகம் பிள்ளை

கேள்விகள்

1. குழந்தைகளின் முகமலர்ச்சியைக் கண்டால் கவலை யாருக்கு நீங்கும்?

2. குழந்தைக்கு மாம்பழம், பலாப்பழம் முதலியவை யார் வாங்கி வருவார்கள்?

அப்பியாசம்

கீழ்க்கண்ட வார்த்தைகளை உபயோகித்து வாக்கியங்கள் எழுது:—

பைங்கிளி, பணிகாரம், கைப்பாவை, சப்பாணி.

## 15. பிறருடன் பழகும் விதம்

| | | |
|---|---|---|
| மரியாதை | பிறர் | வணக்கம் |
| ஆசனம் | அளித்து | உபசரி |
| மீறி | ஆதரி | இடைஞ்சல் |
| வரவேற்று | அவமானம் | கீழ்ப்படிந்து |
| தலைவர் | உத்தரவு | குறுக்கிட்டு |
| கூச்சல் | தயவுசெய்து | வந்தனம் |
| அனுமதி | முறை | கூறிய |

1. பிள்ளைகளே! நீங்கள் தினந்தோறும் பலருடன் பழகி வருகிறீர்கள். அவர்களிடம் எவ்விதம் பேச வேண்டும், எவ்விதம் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிய வேண்டும். மரியாதையாக நடந்து கொள்பவர்களையே பிறர் மதிப்பார்கள்.

2. உங்களைவிட வயதில் பெரியவர்கள் உங்கள் வீட்டிற்கு வந்தால் நீங்கள் எழுந்து நின்று அவர்களுக்கு வணக்கம் செய்யுங்கள். அவர்கள் உட்காருவதற்கு ஆசனம் அளித்து அவர்களை உபசரியுங்கள். உங்களைவிட வயதில் இளையவர்கள் வீட்டிற்கு வந்தால் அவர்களுடன் அன்பாகப் பேசி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுங்கள். விருந்தினர் வந்தால் அவர்களைச் சந்தோஷமாக வரவேற்று உபசரிக்க வேண்டும்.

3. உங்கள் பள்ளிக்கூடத்தைப் பெரியவர்கள் பார்க்க வரும் சமயங்களில் நீங்கள் எல்லோரும் உங்கள் இடங்களில் எழுந்து நின்று வந்தவர்க்கு வணக்கம் செய்ய வேண்டும். வந்தவர் உங்களை உட்காரச் சொன்ன பிறகுதான் நீங்கள் உங்கள் இடங்களில் உட்கார வேண்டும். பிறர் வந்திருக்கும் சமயங்களில் நீங்கள் ஒருவருடன் ஒருவர்

பேசுவதும், சிரிப்பதும், விளையாடுவதும் கூடாது. அவ்விதம் செய்வது வந்தவரை அவமானப் படுத்துவது போலாகும்.

4. வீட்டில் தம்பிகளிடமும், தங்கைகளிடமும் அன்பாய் இருங்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுங்கள். தமையன், தமக்கை, தாயார், தகப்பனர் இவர்களிடம் அன்பாய் இருங்கள். அவர்கள் சொற்களுக்குக் கீழ்ப்படிந்து நடவுங்கள். ஒருபொழுதும் அவர்கள் சொற்களை மீறி நடவாதீர்கள்.

5 பள்ளிக்கூடத்தில் உங்களைவிட வயதில் சிறிய பிள்ளைகளை ஆதரியுங்கள் அவர்கள் சுத்த மாக இருப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய் யுங்கள். அவர்களுக்குத் தெரியாத கணக்குப் பாடம் முதலியவற்றைக் கற்பியுங்கள். அவர்க களிடம் அன்பாகப் பேசுங்கள்.

6. ஒரு கூட்டம் நடக்கும்பொழுது ஏதாவது சொல்ல விரும்பினல் எழுந்து, பின்னல் உள்ளவர் களுக்கு இடைஞ்சல் இல்லாமல் ஓர் ஓரமாக நிற்க வேண்டும். கூட்டத்திற்குத் தலைவராக இருப்பவர் பேச உத்தரவு கொடுத்த பிறகுதான் சொல்ல விரும்பியதைச் சொல்லலாம். ஒருவன் பேசும் பொழுது மற்றொருவர் குறுக்கிட்டுப் பேசக்கூடாது. இருவர் பேசிக் கொண்டிருக்கும் சமயங்களில் குறுக்கிட்டுப் பேசுவது கெட்ட வழக்கம். கூட்டம் நடைபெறும் சமயங்களில் கூச்சல் போடுவதும், ஒருவரிடம் ஒருவர் பேசிக்கொண்டிருப்பதும் கூடாது. கூட்டம் முடிந்தபின் ஒருவர் பின் ஒருவராகச் சென்று பிரியவேண்டும். ஒருவரை ஒருவர் நெருக்கித் தள்ளிக் கொண்டு செல்லலாகாது.

7. நீங்கள் பிறரிடமிருந்து ஒரு பொருளைப் பெறவிரும்பினல், 'ஐயா, தயவு செய்து கொடுங்கள்'

என்று கேட்க வேண்டும். திரும்பக் கொடுக்கும் பொழுது, 'ஐயா, உங்களுக்கு வந்தனம்' என்று சொல்லிக் கொடுக்க வேண்டும் பெரியோரிடம் ஒரு பொருளைக் கொடுக்கும் பொழுதும் வாங்கும் பொழுதும் இரண்டு கைகளாலும் கொடுத்து இரண்டு கைகளாலும் வாங்க வேண்டும். ஒரு பொருளைச் சொந்தக்காரர் அனுமதியில்லாமல் எடுக்கவும் உபயோகிக்கவும் கூடாது.

8. வகுப்பில் ஆசிரியர் உங்களில் யாரிடம் கேள்வி கேட்கிருரோ அவர்தான் பதில் சொல்லலாம். மற்றவர்கள் அவரவர் முறை வரும் வரை காத்திருக்க வேண்டும்.

9. சிறுவர்களே! சிறுமிகளே! நீங்கள் மேற்கூறிய வழிகளில் நடந்து வந்தால் 'நல்லவர்கள்' என்று பெயர் பெறுவீர்கள்.

### கேள்விகள்

1. வயதில் பெரியவர்கள் உன் வீட்டிற்கு வந்தால் நீ என்ன செய்யவேண்டும்?

2. பள்ளிக்கூடத்தைப் பார்க்க வரும் பெரியவர்களுக்கு நீ எவ்விதம் மரியாதை காட்டுவாய்?

3. பிறரிடம் ஒரு பொருளைப் பெற விரும்பினல் எவ்விதம் கேட்கவேண்டும்? அதைத் திரும்பக் கொடுக்கும் முறை என்ன?

4. கூட்டம் நடைபெறும் சமயங்களில் எவ்விதம் மரியாதையாக நடந்து கொள்ளவேண்டும்?

### அப்பியாசம்

பின் வருபவைகளில் பொருத்தமானவைகளை ஒன்று சேர்:—

| | |
|---|---|
| பெரியோர்களைக் கண்டதும் | கடவுளை வணங்குங்கள். |
| காலையில் எழுந்ததும் | கடிதம் எழுதுங்கள். |
| உணவு உண்டதும் | வணக்கம் செய்யுங்கள். |
| ஊருக்குப் போனதும் | சிறிது இளைப்பாறுங்கள். |



## 16. தெனாலிராமனும் திருடர்களும்

| | | |
|---|---|---|
| விகடகவி | பட்டாடை | தொடங்கினார்கள் |
| திருடர்கள் | பத்திரப்படுத்தினான் | தெரியாமல் |
| பதுங்கி | ஆஸ்தி | விடாமல் |
| மனைவி | திடுமென | உரத்த |
| செய்தி | நிலைக்க | பிழைத்தது |
| ஆபரணங்கள் | ஏற்றங்கள் | தாலி |

1. பிள்ளைகளே, முன்காலத்தில் ராய ராஜாவிடம் இராமன் என்ற விகடகவி ஒருவன் இருந்தான். அவன் தெனாலி என்னும் ஊரில் பிறந்தவன். அதனால் அவனைத் தெனாலிராமன் என்று எல்லோரும் சொல்லுவார்கள்.

2. ஒரு நாள் இரவில் சில திருடர்கள் தெனாலிராமன் வீட்டிலே திருடச் சமயம் பார்த்து,

வெளியே பதுங்கியிருந்தார்கள். தெனாலிராமன் இந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டான். உடனே அவன் தன் மனைவியிடம் செய்தியைச் சொல்லி வீட்டிலுள்ள ஆபரணங்கள், பட்டாடைகள், பணங்கள் எல்லாவற்றையும் பத்திரப்படுத்தினான். பின்பு தன் மனைவியை அழைத்து, "இப்பொழுது ஊரிலே திருடர் பயம் அதிகம். அதனால் நம்முடைய ஆஸ்திகளை எல்லாம் பெட்டியில் வைத்துப் பூட்டிக் கிணற்றில் போட்டு விடுவோம். திருடர் பயம் நீங்கின பிற்பாடு அவைகளை எடுத்துக்கொள்வோம்" என்று திருடர்கள் கேட்கும்படி சொன்னான். அப்பால் அவனும் அவன் மனைவியுமாக ஒரு பெட்டியில் கல்லையும் கட்டியையும் நிரப்பி, மெதுவாக எடுத்துச்சென்று பின்புறத் தோட்டத்திலுள்ள கிணற்றில் பெட்டியைத் துடுமெனப் போட்டுவிட்டுச் சென்றார்கள்.

3. மறைவில் இருந்த திருடர்கள், "யாம் வந்த காரியம் 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' போல் ஆயிற்றே. வீட்டினுள் போய்த் திருட வேண்டிய கஷ்டம் இல்லை. கிணற்றில் இறங்கி எடுத்துக்கொண்டு போய்விடலாம்" என்று சந்தோஷம் கொண்டார்கள். தெனாலிராமனும் அவன் மனைவியும் போனதும், திருடர்கள் கிணற்றில் இறங்கிப் பெட்டியை எடுக்க முயற்சி செய்தார்கள். கிணற்றில் நீர் நிலைக்கவில்லை. அதனால் அவர்கள் கிணற்றில் இருந்த ஏற்றங்களைப் பிடித்து இறைக்கத் தொடங்கினார்கள்.

4. இஃது அறிந்த தெனாலிராமன் திருடர்களுக்குத் தெரியாமல் தோட்டத்திற்கு வந்து, தோட்டத்திலுள்ள வாழை, மா, பலா, தென்னை முதலிய மரங்களுக்கு அத் தண்ணீரைப் பாய்ச்சினான். கிணற்றுத் தண்ணீர் வற்றாத படியால்,

திருடர்கள் விடாமல் இறைத்துக் கொண்டே இருந்தார்கள். பொழுதும் விடியத் தொடங்கிற்று.

5 தெனாலிராமன் திருடர்களை நோக்கி, "தோட்டம் எல்லாம் தண்ணீர் பாய்ந்தாயிற்று; ஏற்றம் இறைத்தது போதும்" என்று உரத்த குரலிற் சொன்னான். திருடர்கள் விடியற்காலம் ஆய்விட்டதைத் தெரிந்து ஓட்டம் பிடித்தார்கள். அதுமுதல் தெனாலிராமன் வீட்டிற்குத் திருடர்கள் வருவதே இல்லை.

### கேள்விகள்

1. தெனாலிராமனுக்கு எதனால் அப்பெயர் வந்தது?

2. திருடர்களை ஏமாற்றுவதற்குத் தெனாலிராமன் செய்த தந்திரம் என்ன?

### அப்பியாசம்

1. பழம் நழுவிப் பாலில் விழுந்தது.—இதைப்போல மூன்று பழமொழிகள் சொல்லு.

2. ஒரு நாள் இரவில் திருடர்கள் தெனாலிராமன் வீட்டில் திருடச் சமயம் பார்த்து வெளியில் பதுங்கி யிருந்தார்கள்.—இந்த வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுதி, அவை இன்ன பெயர் என்று எழுது.

3. பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் பொருத்தமான வார்த்தையிட்டுப் பூர்த்திசெய்:—

தலை ——— தாலிப் பாக்கியம். (உருண்டது, ஓடினது, பிழைத்தது)

கிணற்றில் ——— சாமான்களை எடுத்துக்கொண்டு போய் விடலாம். (குதித்து, பாய்ந்து, நீந்தி, இறங்கி.)

ஆஸ்திகளைப் பெட்டியில் ——— ——— கிணற்றில் ——— விடுவோம், (பத்திரப்படுத்தி, வைத்துப் பூட்டி, வீசி, எறிந்து, போட்டு)

4. கீழேகண்ட வார்த்தைகளை உபயோகித்து வாக்கியங்கள் எழுது:—

பதுங்கிவிடு, பத்திரப்படுத்து, கஷ்டம், முயற்சி, சமயம், நிரப்பி, பாய்ந்து, பாக்கியம்.



## 17 தூக்கணங் குருவியும் குரங்கும்

| | | |
|---|---|---|
| ஏராளமாக | குளிர் | சோனுமாரி |
| அறிவு | கோபம் | மழை |
| புய்த்து | சப்தம் | தூக்கணங் குருவி |
| இரக்கப்பட்டு | புத்தி | கூடு |

1. ஒரு மலைப் பக்கத்துக் காட்டில் குரங்குகள் ஏராளமாக வசித்து வந்தன. குரங்குகளின் தன்மையை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? அவைகள் பசி வந்த நேரத்தில் மரங்களிலுள்ள பழங்களைப் பறித்துத் தின்னும். மற்ற நேரங்களில் மரக் கிளைகளில் தாவிக் குதித்து விளையாடும். இந்த விதமாக அக்காட்டிலுள்ள குரங்குகள் காலங் கழிப்பது வழக்கம்.

2. ஒருசமயம் மழை சோனுமாரியாய்ப் பெய்தது. அதனால் பிராணிகள் எல்லாம் குளிரால் வருந்தின. மலையும் குளிர்ந்துவிட்டது ஒரு குரங்கு குளிர் தாங்கமுடியாமல் ஒரு மரத்தின் அடியில் நடுங்கிக்கொண்டு நின்றது. அந்த மரத்தின் மேல் ஒரு தூக்கணங் குருவி கூடு கட்டி வசித்திருந்தது. அக்குருவி குரங்கைப் பார்த்து இரக்கப்பட்டு, "வானரமே, நீயோ எங்களைவிட மேலான பிராணி; பெரும்பாலும் மனிதர்களைப் போலவே இருக்கிறாய் மழைக்காலத்தில் சுகமாக வசிக்க நீ வீடு கட்டிக்கொள்ளலாகாதா?" என்றது.

3. இப்படித் தூக்கணங் குருவி கேட்டதும் குரங்குக்குக் கோபம் மூண்டுவிட்டது உடனே அது தூக்கணங் குருவியைப் பார்த்து "ஏடா, ஊசி மூஞ்சி மூடா, அற்பப் பிராணியாகிய நீயா எனக்குப் புத்தி கற்பிப்பது? இரு. உனக்கு நல்ல அறிவு வரும்படி செய்கிறேன்" என்று சொல்லிற்று. தூக்கணங்குருவி "ஐயோ, நாம் ஏன் இவ்வாறு பேசினோம். நல்லதைத்தானே நாம் சொன்னோம். குரங்கோ கோபங்கொண்டுவிட்டதே; என்ன செய்வது?' என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

4. சிறிது நேரத்தில் மழை நின்றுவிட்டது. குரங்குக்கு உண்டான குளிரும் நீங்கிற்று. குரங்கு மரத்தின்மேல் ஏறத் தொடங்கிற்று. தூக்கணங் குருவி, குரங்கு மரத்தின்மேல் வருவதைக் கண்டு பயந்து, சப்தம் இட்டுக்கொண்டு வெளியே பறந்தது. சில குஞ்சுகள் தாயுடன் வெளியே பறந்துபோயின. குரங்கு கூட்டின் அருகு சென்று, "குருவியே, என்னால் கூடு கட்ட முடியாவிட்டாலும், உன் கூட்டைப் புய்க்கமுடியும்" என்று சொல்லிக்கொண்டே, அக்கூட்டைத் தன் கைகளால் புய்த்து எறிந்தது.

5. அது மட்டோ, குரங்கு கூட்டைப் புய்த்து எறிந்த காலத்தில், பறக்க முடியாமல் கூட்டினுள் இருந்து சப்தம் இட்ட சிறு குஞ்சுகளையும் குரங்கு பூமியில வீசி அறைந்து கொன்றது தூக்கணங் குருவி தன் கூட்டையும் இழந்து, குஞ்சுகளையும் பறிகொடுத்து வருந்திற்று.

### கேள்விகள்

1. குரங்குகளின் தன்மை என்ன?
2. தூக்கணங் குருவி குரங்கினிடம் என்ன சொல்லியது?
3. அதைக் கேட்ட குரங்கு என்ன செய்தது?
4. இந்தப் பாடத்தினால் நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

### அப்பியாசம்

கீழ்க்கண்டவைகளில் எது சரி, எது தப்பு?

| | சரி |
|---|---|
| 1. சூரியன் கிழக்கில் உதிக்கும். | |
| 2. சூரியன் தெற்கில் மறையும். | |
| 3. பால் வெள்ளை நிறம். | |
| 4. பொன் பச்சை நிறம். | |
| 5. கரி சிவப்பு நிறம். | |
| 6. நாய் 'ளொள், ளொள்' என்று குரைக்கும் | |
| 7. நாம் கைகளால் வேலை செய்கிறோம். | |
| 8. நாம் காதுகளால் பாடுகிறோம். | |
| 9. ஞாயிற்றுக்கிழமைக்கு அடுத்த் கிழமை செவ்வாய்க் கிழமை. | |
| 10. ஒரு வருஷத்திற்குப் பன்னிரண்டு மாதங்கள். | |

பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுதி அவை இன்ன பெயரென்று எழுது:—

1. மழை நின்றதும் குரங்கு மரத்தின்மேல் ஏறிற்று.
2. குரங்குகள் மரத்தில் ஏறிப் பழங்களைத் தின்று விளையாடும்.
3. தெனாலிராமனும் மனைவியும் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்து கிணற்றில் போட்டுவிட்டார்கள்.
4. தோட்டம் முற்றும் தண்ணீர் பாய்ந்தது.
5. விடியற்காலம் ஆனதும் திருடர்கள் மறைந்துபோய் விட்டார்கள்.



## 18. கைத்தொழில்கள்

| | | |
|---|---|---|
| மக்கள் | உரிய | வாணிகம் |
| சால | பொருள் | கிராமவாசி |
| கைக்கொள் | வருமானம் | செல்வர் |
| முதலாளி | தொழிலாளி | தேவை |
| உற்பத்தி | சொற்பம் | ஏராளமான |

1. மக்கள் பணம் தேடும்பொருட்டு ஏதேனும் ஒரு தொழிலை மேற்கொள்வர். பணம்தேடுவதற்கு உரிய வழிகள் பல. ஆயினும் அவையாவும் விவசாயம், கைத்தொழில், வாணிகம், உத்தியோகம் என்னும் நான்கனுள் அடங்கும்.

2. எல்லாத் தொழில்களிலும் விவசாயம் சாலச்சிறந்தது. ஏனெனில் விவசாயம் மூலமாகத் தான் நமது உணவு, உடை முதலியவைகளுக்கு வேண்டிய பொருள்கள் கிடைக்கின்றன. தவிர, கைத்தொழிலுக்கு வேண்டிய பல பொருள்களும் விவசாயம் மூலம் கிடைக்கின்றன.

3. விவசாயத்திற்கு அடுத்தபடியாக உள்ளது கைத்தொழில். 'கைத்தொழில்' என்பதற்குக் கையினுல் செய்யப்படும் தொழில் என்பது பொருள். ஆயினும் எந்திரங்களினுல் செய்யப்படும் தொழில்களும் இதனுள் அடங்கும்.

4. கிராமவாசிகள் மேற்கொள்ளக் கூடிய கைத்தொழில்கள் பல இருக்கின்றன. அவை இராட்டையில் நூல் நூற்றல், தறியில் நெய்தல், கற்ருழை, சணல், தென்னை, பனை இவற்றின் நார்களால் கயிறு திரித்தல், பனையோலையால் பாய்களும் பெட்டிகளும் முடைதல், கோரைப்பாய் பின்னுதல், மூங்கில், பிரம்பு இவற்ருல் கூடை முடைதல், மண் பாண்டங்கள் செய்தல், உலோகங்களைக் கொண்டு நகைகள், பாத்திரங்கள் செய்தல் முதலியனவாம்.

5. விவசாயிகளும் மேற்கூறிய தொழில்களில் ஏதேனும் ஒன்றைக் கைக்கொள்ளலாம். விவசாயிகளுக்கு வருஷம் முழுவதும் விவசாய சம்பந்தமான வேலை இராது. ஆதலால் அவர்கள் ஏதேனும் ஒரு கைத்தொழிலை உதவித் தொழிலாகச் செய்து வந்தால் அவர்களுடைய வருமானம் அதிகப்படும் அல்லவா!

6. எந்திரத் தொழில் நடை பெறுவதற்கு எந்திரங்கள் வாங்க அதிகப் பணம் வேண்டும். ஆதலால் செல்வர்கள் எந்திரத் தொழிற்சாலை நடத்தி வரவேண்டும். முதலாளிகளும் தொழிலாளிகளும் ஒற்றுமையாய் இருந்து தொழில் நடத்தி வரவேண்டும். அவர்கள் நாட்டின் தேவைக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்துவரவேண்டும். எந்திரங்களின் மூலமாகச்

சொற்ப காலத்தில் ஏராளமான பொருள்களை உற்பத்தி செய்யலாம்.

7. கைத்தொழில் ஓங்கினால்தான் நாட்டின் செல்வம் பெருகும். செல்வம் பெருகினால்தான் தேசம் உயர்நிலை அடையும்.

8. செல்வர்காள்! நீங்கள் ஏதேனும் ஒரு கைத்தொழிலைக் கற்றுக்கொள்ளுங்கள்.

### கேள்விகள்

1. நான்கு வகையான தொழில்கள் எவை?
2. உழவுத் தொழில் ஏன் மிகவும் சிறந்தது?
3. 'கைத்தொழில்' என்பதன் அர்த்தம் என்ன?
4. கிராமவாசிகள் மேற்கொள்ளக் கூடிய ஏதாவது நான்கு தொழில்கள் சொல்.
5. விவசாயிகளும் ஏதாவது ஒரு கைத்தொழிலை மேற்கொள்ளலாம். ஏன்?
6. எந்திரத் தொழிற்சாலைகள் ஏற்படுவதால் என்ன நன்மைகள்?

### அப்பியாசம்

1. பனையோலை — இதைப் பிரித்து எழுது.
2. அவன் நூல் நூற்கிறான்.
அவன் தொழில் நூற்றல்.
நான் சோறு உண்கிறேன்.
என் தொழில் உண்ணுதல்.
ஆகவே, நூற்கிறான், உண்கிறேன் என்பன வினைச் சொற்கள்.
இவைகளைப்போல் இரண்டு வாக்கியங்கள் எழுது. வினைச் சொற்களைக் குறிப்பிடு.


1
2
3
4
5

## 19. கிழவனும் மூன்று குமாரர்களும்

| | | |
|---|---|---|
| வயோதிகன் | கடைசி முறை | பாலியன் |
| புத்திமதி | கூடுமானவரை | நொடிக்குள் |
| ஒற்றுமை | பலமுறை | இளையவன் |
| மரணகாலம் | அனுபவம் | மூத்தவன் |
| கிட்டியது | யத்தனம் | சச்சரவு |

1 ஓர் ஊரில் ஒரு வயோதிகன் இருந்தான். அவனுக்கு வயது எண்பத்தைந்து இருக்கலாம். அவன் சில மாத காலமாக நோயினல் கஷ்டப் பட்டான். அவனுக்கு மூன்று குமாரர்கள் உண்டு. அவர்கள் எப்பொழுதும் ஒருவரோடொருவர் சண்டையிடுவது வழக்கம். கிழவனுக்கு இது கொஞ்சமும் பிடித்தமில்லை. இவர்கள் ஒற்றுமை இல்லாமல் இருப்பதைப் பார்த்து மிகவும் மனம் வருந்தினன். எத்தனையோ முறை அவர்களுக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்லியும் அவர்கள் கேட்க வில்லை.

2. கிழவன் தனக்கு மரணகாலம் கிட்டியதாகத் தெரிந்தான். ஆகவே தன் குமாரர்களுக்குக் கடைசி முறையாக நல்ல புத்தி கற்பிப்போம் என்று எண்ணி ஞன். குமாரர்களைத் தன் பக்கத்தில் அழைத்து, “நீங்கள் நமது தோட்டத்திற்குப்போய் ஒரு கட்டுச் சுள்ளி விறகு கொண்டுவாருங்கள்” என்ருன். பிள்ளைகள் தங்களுடைய தந்தை சொன்னபடி விரைவாகத் தோட்டத்துக்குச் சென்று ஒரு கட்டுச் சுள்ளி விறகு கொண்டுவந்து தகப்பன் முன் வைத்தார்கள்.

146137

3. கிழவன் தன்னுடைய குமாரர்களில் மூத்தவனை அழைத்து, "அப்பா! இந்த விறகுக் கட்டை ஒடி" என்றான். அவன் தன்னால் கூடுமானவரை முயன்றும் அந்த விறகுக் கட்டை ஒடிக்க முடியவில்லை. கிழவன் இரண்டாவது குமாரனை அழைத்தான். "அப்பா! நீயாவது இந்தக் கட்டை ஒடி" என்று கூறினான். அவனும் பல முறை ஒடிக்க யத்தனம் செய்தும் அவனால் ஒடிக்க இயலவில்லை. அப்பால் கடைசி மகனை அழைத்து, "நீ பாலியனாக இருக்கிறாய், ஆகையால் நீ இதை ஒடிக்கக் கூடுமென்று எண்ணுகிறேன்" என்றான். அவனும் ஒடிக்க முயன்று, தன் முயற்சியில் வெற்றி அடையவில்லை.

4. கிழவன் இந்த நிலையில் தன் குமாரர்களை நோக்கி, "நீங்கள் இந்தக் கட்டை அவிழ்த்துத் தனித் தனியாகவுள்ள சுள்ளிகளை ஒடியுங்கள்" என்றான். அவர்கள் ஒரு நொடிக்குள் ஒடித்துவிட்டார்கள். கிழவனும் தன் கண்ணை மூடிவிட்டான்.

5. பிள்ளைகள் கிழவனுக்குச் செய்யவேண்டிய அடக்கம் முதலிய காரியங்களை முடித்துவிட்டு, ஒரு நாள் தமக்குள் பேசிக்கொண்டு இருந்தார்கள். அப்பொழுது இளையவன் தன் மூத்த தமையனிடம், "அண்ணா! நமது தந்தை தான் இறக்கும்போது சுள்ளி விறகுகளைக் கொண்டு வந்து ஒடிக்கச் சொன்னது எதற்காக? எனக்கு விளங்கவில்லையே" என்று கேட்டான்.

6. அப்பொழுது மூத்தவன், "தம்பி விறகுச் சுள்ளிகள் ஒன்று சேர்ந்திருந்த போது நம்மால்

அதனை ஒடிக்க முடியவில்லை. தனித்தனியாக அவைகளைப் பிரித்ததும் நாம் ஒடித்து விட்டோம். அதுபோல நாம் ஒற்றுமையாக இருந்தால் எவராலும் நம்மைக் கெடுக்க முடியாது. இந்த நீதியை அல்லவா நமது தந்தை வெளிப்படச் சொல்லாமல் அநுபவமாகக் காட்டியிருக்கிறார்" என்றான். சகோதரர் மூவரும் அதுமுதல் தங்களுக்குள் யாதொரு சண்டை சச்சரவும் இல்லாமல் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

### கேள்விகள்

1. கிழவன் தனது குமாரர்களுக்கு உபதேசித்த புத்திமதி என்ன?

2. அந்தப் புத்திமதியை எந்த உதாரணத்தால் கற்றுக் கொடுத்தார்?

### அப்பியாசம்

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகளை எழுது:—

1. ஓர் — ஒரு — இருந்தான். 2. அப்பா! — இந்த — கட்டை — என்றான்.

## 20. மரம் சாட்சியானது

| | | |
|---|---|---|
| ஏமாறுதல் | நீதிபதி | மருந்துகள் |
| அயல் தேசம் | சிறைவாசம் | பெருமை |
| சம்பாதித்தல் | ஏமாற்றுதல் | நியாயஸ்தலம் |
| ஏராளமான | வைத்தியர் | அதட்டுதல் |
| க்ஷேமலாபம் | தீர்ப்பு | சாட்சி |

1. அழகாபுரி என்னும் ஊரில் கோபாலன் என்னும் இளைஞன் ஒருவன் இருந்தான். அவனுடைய தந்தை இறக்கும்போது அவனுக்கு ஆயிரம் ரூபாய் சேர்த்து வைத்திருந்தார். கோபாலன் அயல் தேசங்களுக்குப் போய் ஏராளமான செல்வம் சம்பாதிக்க வேண்டுமென்று எண்ணினன். தன்னிடமுள்ள ஆயிரம் ரூபாயையும் என்ன செய்வது என்று அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை.

2. அவன் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒரு கிழவன் இருந்தான். அவனுக்கு ஏராளமான நிலங்கள் வீடுகள் எல்லாம் உண்டு. அவன் தன் வீட்டுத் தோட்டத்தில் ஒரு மரத்தடியில் நின்று கொண்டு இருந்தான். கோபாலன் அவனிடம் போய், "ஐயா, பெரியவரே! நான் அயல் தேசம் போக வேண்டியதிருக்கிறது. என்னிடம் இருக்கும் ஆயிரம் ரூபாயையும் நான் திரும்பி வரும் வரை காப்பாற்றி வைத்திருங்கள். நான் வந்ததும் பெற்றுக்கொள்கிறேன். எனக்கு இந்த உதவியைத் தாங்கள் செய்யவேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். கிழவனும் அவ்விதமே செய்வதாகச் சம்மதிக்கவே, கோபாலன் தன் பணத்தை அவனிடம் கொடுத்து விட்டு அயல் தேசம் போய் விட்டான்.

3. கோபாலன் மூன்று வருஷம் கழித்துத் தன் ஊருக்கு வந்தான். தனக்கு உபகாரம் செய்த கிழவனைக் காணச் சென்று, அவனுடைய க்ஷேமலாபங்களையெல்லாம் விசாரித்தான்.

சிறிது நேரம் பேசிவிட்டு முடிவில் தன் பணத்தைத் தரும்படி கிழவனிடம் கேட்டான். கிழவனே, '"பண மேது? கிணமேது? உனக்கென்ன பித்தம் தலைமேல் ஏறிவிட்டதா? வைத்தியரிடம் போய் நல்ல மருந்துகள் வாங்கிச் சாப்பிடு, போ" என்று சொன்னான். கோபாலன், "பெரியவரே! இதென்ன காரியம்? ஒன்றும் தெரியாதவர் போலப் பேசுகிறீரே! உம்முடைய வயதுக்கும் பெருமைக்கும் இது பொருத்தமான செய்கை அன்று. தயவுசெய்து பணத்தைக் கொடுத்துவிடும். இல்லாவிடில் வீணாக நாம் நியாய ஸ்தலத்திற்குப் போக நேரிடும்" என்றான். ஆனால், கிழவன், "அடே, வீண் பொய் வார்த்தைகளைப் பேசாதே. உன்னாலாவதைப் பார். என்னாலாவதை நானும் பார்க்கிறேன். ஓடிப்போ; இங்கே நில்லாதே" என்று அதட்டிப் பேசினான்.

4. கோபாலன் உடனே நீதிபதியிடம் போய் இந்த வழக்கை முறையிட்டான். நீதிபதி ஒரு சேவகனை அழைத்துக் கிழவனைக் கூட்டிக்கொண்டு வரச் சொன்னார். கிழவன் வந்ததும் நீதிபதி, "கிழவரே! நீர் இவரிடம் பணம் வாங்கினது உண்டா?" என்று கேட்டார். கிழவன், தான் யாதொரு பணமும் வாங்கவில்லையென்று மறுத்து விட்டான்.

5. நீதிபதி, கோபாலனை நோக்கி, 'உனக்கு சாட்சி உண்டா?' என்று கேட்டார். கோபாலன் "நான் இந்தப் பெரியவர் வீட்டுத் தோட்டத்தில் மரத்தடியில்வைத்து இவரிடம்பணம்கொடுத்தேன். எனக்குச் சாட்சி யாரும் இல்லை" என்றான். நீதிபதி, "அப்படியானால் நீ போய் நான் அழைத்துக் கொண்டு வரச் சொன்னதாக மரத்தினிடம் சொல். அந்த மரம் தானே வரும்; போ" என்று கோபாலனிடம் சொல்லி யனுப்பினார். கோபாலன் அவ்விதமே சென்று மரத்தை அழைத்தான். மரம் அசையாமல் நின்ற இடத்திலே நின்றது.


1
2
3
4
5

6. கோபாலன் திரும்புவதற்குள் நீதிபதி கிழவனை நோக்கி, "கோபாலன் இந்நேரம் மரத் தண்டை போயிருப்பானே?" என்று கேட்டார். கிழவன், "அந்த மரம் எவ்வளவு தூரத்திலிருக்கிறது! இதற்குள் அவன் எப்படிப் போகமுடியும்?" என்றான். இந்தச் சமயம் கோபாலன் திரும்பி வந்து நீதிபதியிடம், "ஐயா, தாங்கள் சொல்லியதைச் சொல்லி மரத்தை அழைத்தேன். மரம் நின்றபடியே நின்றது. நான் தங்களிடம் திரும்பி வந்துவிட்டேன்" என்றான்.

7. நீதிபதி அவனைப் பார்த்து, "நீ போயிருக்கும் போது அந்த மரம் இவ்விடம் வந்து சாட்சி சொல்லிப் போய்விட்டது" என்று சொல்லிக் கிழவனை நோக்கி, "நீ கொடுத்த வாக்குமூலமே நீ பணம் வாங்கினாய் என்பதை நிரூபித்துவிட்டது. உடனே கோபாலனிடம் பணத்தைக் கொடுத்துவிடு. அன்றியும் நீ பொய் சொல்லி ஏமாற்றிய குற்றத் திற்காகப் பத்து மாதம் சிறை வாசமும் செய்ய வேண்டும்" என்று தீர்ப்புக் கூறினார்.

8. கிழவன் பொய் சொன்னதனால் பத்து மாதம் சிறைக்குச் சென்றுவிட்டு வீடு சேர்ந்தான்.

### கேள்விகள்

1. கோபாலன் தன்னிடமுள்ள ஆயிரம் ரூபாயை என்ன செய்தான்?
2. கோபாலன் அயலூர் போய்த் திரும்பிக் கிழவனிடம் ரூபாய் கேட்டதற்குக் கிழவன் சொன்ன பதில் என்ன?
3. கோபாலனுக்கு மரம் எப்படிச் சாட்சி சொன்னது?

### அப்பியாசம்

கீழ்க்கண்ட வார்த்தைகளில் பொருத்தமானவைகளைக் கோடிட்ட இடங்களில் அமைத்து எழுது:—

| | | |
|---|---|---|
| உயரமான | ஏராளமான | ஆழமான |
| அழகான | இனிமையான | சூடான |

1. கோபாலன்........பொருள் சம்பாதிக்க விரும்பினான்.
2. நான் ஒரு........குதிரை வாங்கினேன்.
3. ........பால் கொண்டுவா.
4. தோட்டத்தில் ஒரு........கிணறு இருக்கிறது.
5. தோட்டத்தில்........மரங்கள் வளர்ந்திருக்கின்றன.
6. பாலன்........பாட்டுப் பாடினான்.



## 21. புத்தியில்லாத ஆமை

| | | |
|---|---|---|
| அன்னப் பறவை | தோழர்கள் | மாளுதல் |
| உல்லாசம் | கௌவுதல் | இரைச்சல் |
| வேடிக்கை | நடு வழி | இறகு |
| ஆச்சரியம் | இரு முனை | இதழ்கள் |
| காரணம் | ஆகாயம் | நீந்துதல் |
| நேரிடுதல் | கூச்சல் | வினவின |
| வறண்டு போதல் | கூக்குரல் | நுனி |
| ஆமை | அந்தோ | கழி |
| கம்பு | பட்சி | முளைத்தல் |

1. ஒரு குளத்தில் இரண்டு அன்னப் பறவைகள் வசித்து வந்தன. அக்குளத்தில் தாமரை, அல்லி முதலியன முளைத்து அக்குளத்தை அழகு படுத்தின. அன்னப் பறவைகள் தாமரை இதழ்களைத் தின்றும், தாமரை இலைகளில் படுத்து உறங்கியும் காலங்கழித்து வந்தன. அத் தடாகத்தில்

ஓர் ஆமையும் வாழ்ந்துவந்தது. அன்னப் பறவைகள் அந்த ஆமையுடன் வெகு சிநேகமாக இருந்தன. அவை மூன்றும் தண்ணீரில் உல்லாசமாக நீந்தியும் வேடிக்கையாகப் பேசியும் நேரம் போக்கி வந்தன.

2. ஒரு சமயம் பல மாதங்கள் மழை பெய்யாது ஒழியவே, அத்தடாகத்தில் உள்ள தண்ணீர் வற்ற ஆரம்பித்தது. இன்னும் சில நாட்களில் குளம் வறண்டு போகும் என்பதை அன்னப்பட்சிகள் அறிந்துகொண்டன. ஒரு நாள் அவை ஆமையை நோக்கி, "நண்பா, இக்குளத்தில் தண்ணீர் குறைந்துகொண்டு வருகிறது. இனிமேல் இக்குளத்தில் நாங்கள் தங்கியிருக்க முடியாது. ஆகையால் நாங்கள் வேறொரு தடாகத்துக்குச் செல்வதாகத் தீர்மானித்துள்ளோம். நீ என்ன செய்யப்போகிறாய்?" என்று வினவின.

3. ஆமை, "தோழர்களே, நீங்கள் உங்கள் இறக்கைகளின் உதவியால் பறந்து செல்லக்கூடும். எனக்கு அவ்வாறு பறந்து செல்ல இறக்கைகள் இல்லை. விரைவாக நடந்து செல்வதற்கு ஏற்ற நீண்ட கால்களும் இல்லை என் குறுகிய கால்களின் உதவியால் நான் மிகவும் மெதுவாகவே நகர்ந்து செல்லக்கூடும். உங்களைப் பிரிந்திருக்க எனக்கு மனமுமில்லை. நீங்கள் எவ்விதமாகவாவது, என்னையும் அழைத்துச் செல்லாவிட்டால் நான் என் வாழ்நாட்களைச் சந்தோஷமாகப் போக்க முடியாது" என்றது.

4. அன்னங்கள் ஆமையைச் சுமந்து செல்ல ஒரு யோசனை செய்தன. அவை ஒரு சிறிய கம்பைக் கொண்டுவந்து ஆமையின் முன் வைத்து, "நண்பா! இந்தக் கழியை நீ பலமாகக் கௌவிக்கொள்ள வேண்டும். நாங்கள் அக் கொம்பின் நுனிகளை ஆளுக்கு ஒருபுறமாகப் பற்றிக்கொண்டு தூக்கிச் செல்வோம். வழியில் நீ எக்காரணம் பற்றியும் வாய்

திறக்கக்கூடாது. வாய் திறந்தால் உன் கதி என்ன ஆகும் என்பதை நீயே யோசித்துக்கொள்'' என்றன. அதற்கு ஆமை, ''நடுவழியில் வாயைத் திறந்தால் கீழே விழுந்து உயிரை இழப்பேன். இது எனக்குத் தெரியாதா?'' என்று கூறிக் கழியின் நடுப் பாகத்தைப் பலமாகக் கௌவிக்கொண்டது.

5. அன்னப் பறவைகள் கொம்பின் இரு முனைகளையும் பற்றிக்கொண்டு, ஆகாயத்தில் கிளம்பிப் பறந்து சென்றன. அவை மலைகளையும், காடுகளையும், நாடுகளையும் கடந்து சென்றுகொண்டிருந்தன. அவை ஓர் ஊரின் மேலாகப் பறந்து செல்லுகையில் கீழே நின்று கொண்டிருந்த ஜனங்கள் அன்னப் பறவைகள் ஆமையைத் தூக்கிச் செல்வதைப் பார்த்தனர். அவர்கள் ஆச்சரியமுற்று, ''ஆ! இது என்ன புதுமை!'' என்று கூறி, இரைச்சலிட்டனர். அன்னங்கள் ஜனங்கள் போட்ட கூச்சலைச் சிறிதும் கவனியாது பறந்தன. ஆனால் ஆமை அந்தக் கூக்குரலின் காரணம் யாது என்று அன்னங்களிடம் கேட்கும்பொருட்டுத் தன் வாயைத் திறந்தது. அந்தோ! அது உடனே தரையில் விழுந்து மாண்டது. இதைக் கண்ணுற்ற அன்னப் பறவைகள் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டே பறந்து சென்றன. அன்னப் பட்சிகள் கூறியபடி ஆமை தன் வாயைத் திறவாமல் இருந்தால் அதற்கு இக்கதி நேரிட்டிராது அன்றோ?

### கேள்விகள்

1. குளத்தில் இரண்டு அன்னப் பறவைகளுடன் எது வாழ்ந்து வந்தது ?

2. அன்னப் பறவைகள் ஏன் குளத்தைவிட்டுப் பிரிய எண்ணின?

3. அன்னப் பறவை வேறிடத்திற்குச் செல்லும்போது கூடப் போன ஆமையின் கதி என்னவாயிற்று?

4. ஆமையைப் 'புத்தியில்லாத ஆமை' என்று சொல்லுவது எவ்விதம் பொருந்தும்?



## 22. தமிழ்நாட்டு வீரர்

| | | |
|---|---|---|
| பாடுபட்ட | வறுமை | ஆவி |
| வருவாய் | வாணிபம் | அறிவுறுத்தி |
| நலன் | பணி | ஈடுபட்டு |
| தியாகம் | பிரசங்கம் | திறமை |
| சார்பில் | பரிந்து | நன்கொடை |
| குற்றம் சாட்டி | நூல்கள் | முதுமை |
| ஞாபகார்த்தமாக | காட்சி | உழைத்து |

1. தமிழ்நாட்டிலே நம்தேசமக்களுக்காகப் பாடுபட்ட பெரியார்களுள் சிதம்பரம் பிள்ளை என்பார் ஒருவர். இவர் தமிழ் நாட்டில் தூத்துக்குடியை அடுத்துள்ள ஓட்டப்பிடாரம் என்னும் ஊரில் உலகநாத பிள்ளைக்குப் புதல்வராகப் பிறந்தார். வேளாளர் குலத்தினர்.

2. சிதம்பரம் பிள்ளை தம் தாய் மொழியாகிய தமிழை நன்கு கற்றறிந்ததோடு ஆங்கிலமும் கற்றார்; சட்டப் பரீட்சையில் தேறினர். ஓட்டப்பிடாரம் ஊரிலேயே வக்கீல் தொழில் நடத்தி வந்தார். இத் தொழிலில் இவருக்கு இருந்த திறமை முழுவதும் வெளிப்படச் சிற்றூரான ஓட்டப்பிடாரம் போதவில்லை. ஆகவே, இவர் தூத்துக்குடி சென்று அங்கே தம் தொழிலை நடத்திப் புகழ் பெற்றார்.

3. இவருக்குத் தம் தொழில் மூலம் நல்ல வருவாய் வந்துகொண்டிருந்தது. ஆனல் இவர், "நாம் மட்டும் சௌக்கியமாக வாழ்ந்தால் போதாது" என்று நினைத்தார். நாட்டு மக்கள் வறுமையாலும் அறியாமையாலும் கஷ்டப்படுவதைக் கண்டார். தம் உடல், பொருள் ஆவி இவைகளை நம் நாட்டு மக்களது நலனுக்காக அளிக்கத் துணிந்தார்.

4. "நாட்டின் வறுமை யொழிய ஒவ்வொருவரும் ஏதாவது கைத்தொழில் செய்தல்வேண்டும்; வாணிபமும் ஓங்கவேண்டும்; மக்கள் கல்வி கற்றுத் தங்களைச் சீர்திருத்திக் கொள்ளவேண்டும்" என்று ஜனங்களுக்கு அறிவுறுத்தி வந்தார்.

5. வாணிபம் வளர்வதற்கு நம் நாட்டில் பல கப்பல்கள் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தார். ஒரு கப்பல் கட்டுவதற்கே லட்சக்கணக்கான ரூபாய் செலவாகும். ஆதலால் கூட்டுறவு முறையில் சங்கம் அமைத்துக்கொண்டு கப்பல் வாங்கத் தீர்மானித்துப் பல ஊர்களுக்கும் சென்று பெருஞ் செல்வர்களைக் கண்டு பேசினர். பல பங்குகள் சேர்த்துச் 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' என்று ஒரு சங்கத்தை அமைத்தார். அதன் பெயரால் இரண்டு கப்பல்கள் வாங்கித் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் ஓடிவரச் செய்தார்.

6 கப்பல் வாங்கும் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் இவர் சிறிதுகாலம் பம்பாயில் தங்க நேரிட்டது. அப்பொழுது தூத்துக்குடியிலிருந்த அவரது மனைவி தேக அசௌக்கியம் அடைந்தாள். இவரது மகனும் நோய்வாய்ப்பட்டான். ஆகவே இவரது மனைவி இவரைப்பம்பாயைவிட்டுத் தூத்துக்குடிக்கு வரும்படி எழுதினுள். ஆனல் இவர் பம்பாயை விட்டுப் புறப்பட வில்லை. 'கப்பலோடுதான் தூத்துக்குடிக்குப் புறப்படுவேன்.; இல்லையேல் கடலில் விழுந்து உயிர் விடுவேன்' என்று பதில் எழுதிவிட்டார். இவ்விதம் நாட்டுச் சேவையில் ஈடு பட்டபொழுது இவர் தமது மனைவி மக்களைப் பற்றியும் கவலை கொள்ளவில்லை. என்னே இவரது தியாகம்!

7. சிதம்பரம் பிள்ளை தமிழில் அழகாகப் பிரசங்கங்கள் செய்வதில் திறமையுள்ளவர். மக்கள் மனத்திற் பதியும்படி பேசுவார். இக்காலத்தில் திருநெல்வேலியில் தேசாபிமான சங்கம் என்று ஒரு சங்கம் ஏற்பட்டது. இதன் சார்பில் சிதம்பரம் பிள்ளை திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் பல பிரசங்கங்கள் செய்து வந்தார். தூத்துக்குடியில் மில் கூலியாட்களுக்காக முதலாளிகளிடம் பரிந்து பேசிக் கூலியை உயர்த்தும்படி வேண்டினர். அவர்கள் வேலை நிறுத்தம் செய்திருந்த பொழுது பொது மக்களிடம் நன்கொடை பெற்று அவர்களுக்கு உதவினர்.

8. இவ்விதம் இவர் தேசமக்களுக்காகப் பாடுபட்டு வந்தபொழுது அரசாங்கத்தார் இவர் மீது அரசியல்குற்றம்சாட்டி இவருக்குத் தண்டனைவிதித்தனர். ஆகவே இவர் ஆறு வருஷ காலம் சிறையில் இருக்க வேண்டியதாயிற்று. அக் காலத்தில் இவர் பல நூல்களை ஆராய்ந்து வந்தார். அதன் பயனுக இவர் சிறையினின்று வெளிப்பட்டதும் பல புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டார்.

9. சிதம்பரம் பிள்ளை தம் முதுமைப் பருவத்தில் சில காலம் கோவில்பட்டியிலும் பின்னர் தூத்துக்குடியிலும் வக்கீல் தொழில் நடத்திவந்தார். 1936ம் வருஷம் நவம்பர் மாதம் 18ம் நாள் மரணமடைந்தார். இவர் உடல் மறைந்ததே யன்றி இவரது புகழ் நீடித்து நிற்கிறது; இவரது ஞாபகார்த்தமாக இக்காலத்தில் இவரது பெயரால் பல சங்கங்கள் நடந்து வருகின்றன. இவரது உருவப் படம் பல இடங்களில் காட்சி அளிப்பதைக் காண்கிறோம்.

10. பிள்ளைகளே! நீங்களும் இப்பெரியவரைப் போல் நாட்டுக்காக உழைத்துப் புகழ் அடைவீர்களாக!

## கேள்விகள்

1. சிதம்பரம் பிள்ளை பிறந்த ஊர் எது? தந்தை பெயர் யாது?
2. இவர் என்ன தொழில் பார்த்து வந்தார்? அத்தொழிலை எங்கெங்கு நடத்தினர்?
3. இவர் நாட்டுக்காகச் செய்த பணிகள் என்ன?
4. கப்பல் வாங்கும் பொருட்டு இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன?
5. இவர் தியாகி என்பதற்கு ஓர் உதாரணம் கொடு.
6. சிறைவாசம் இவருக்கு எவ்விதம் நன்மை அளித்தது?

## அப்பியாசம்

1. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வாக்கியங்களில், இரண்டு வாக்கியங்களைச் சேர்த்து ஒரு வாக்கியமாக எழுது:—

(1) நான் புத்தகம் வாங்கினேன்.
நான் ஒரு கற்பலகை வாங்கினேன்.

(2) இது ஒரு அழகான வீடு.
இது ஒரு பெரிய வீடு.

(3) ஒரு குளத்தில் இரண்டு அன்னங்கள் வசித்தன.
ஒரு குளத்தில் ஓர் ஆமை வசித்தது.

2. சிதம்பரம் பிள்ளை பம்பாய்க்குச் சென்றார்.
அவர் இரண்டு கப்பல்கள் வாங்கினர்.
மேற்கண்ட வாக்கியங்களிலுள்ள வினைச் சொற்களைக் குறிப்பிடு.



## 23. சிறுவனது தியாகம்

| | | |
|---|---|---|
| போர்க்களம் | துவங்கி | எதிரி |
| வாகைசூட | வெற்றி | துணிந்து |
| புரிந்து | திண்ணம் | பகைவர் |
| இன்றேல் | சுவர்க்கம் | வீராவேசம் |
| அபவாதம் | கீர்த்தி | ஏளனம் |
| அரிந்து | படுகாயம் | சக்தியற்றது |

இடம் : டில்லியின் அருகில் போர்க்களம்.

காலம் : இரவு.

உறுப்பினர்கள் : பிருதிவிராஜன், சேனாதிபதி, வீரர்கள்.

**பிருதிவிராஜன்:** வீரர்களே! போர் தொடங்கிப் பல நாட்கள் ஆகியும் முடிவு எதுவும் காணோம். ஷாவுதீனுடைய சேனையோ கடல் போன்று பரந்திருக்கிறது. நாட்கள் நீடித்தால் எதிரியின் பலம் மேலும் மேலும் அதிகரிக்கும். ஆதலின் நாளைத்தினம் எவ்விதத்திலும் பகை முடித்து வாகை சூடவேண்டும். என்ன சொல்கிறீர்கள்?

**வீரர்கள்:** வெற்றி நமக்கே. (*தங்கள் தங்கள் பட்டாக் கத்தியைத் தொட்டுக் கொண்டு*) இப்பட்டாக் கத்தி சத்தியமாக, துணிந்து போர்புரிந்து நாளைத் தினம் வெற்றி காண்போம்; இது சத்தியம், சத்தியம்.

(*அலங்காரன் என்னும் ராஜபுத்திரச் சிறுவன் ஓடிவந்து பிருதிவிராஜன் முன் தலைவணங்கி நிற்கிறான்.*)

**அலங்காரன்:** வேந்தே! பகைவர் எம்மாத்திரம்? நாம் ஓர் அடி முன்வந்தால் அவர்கள் பத்து அடி பின்வாங்குவது திண்ணம். எனக்குப் படைத் தலைமை கொடுங்கள். நான் பகைவர்களைக் கலங்கி ஓடும்படி செய்கிறேன். இல்லாவிட்டால் அவர்களது தலைகள் தரையில் உருளும்படி செய்கிறேன். இன்றேல் நான் வீர சுவர்க்கம் அடைகிறேன். என் உடைவாள்மீது ஆணை. எனக்குப் படைத் தலைமை கொடுத்தருளுங்கள்.

**பிருதிவிராஜன்:** சேனாதிபதியே! பார்த்தீரா, இச்சிறுவனது வீரத்தை! இச்சிறுவனைப் போல் ஒவ்வொருவரும் வீராவேசம் கொண்டு எழுந்தால் வெற்றி நமக்கே. இச்சிறுவனுக்குப் படைத் தலைமை கொடுப்போமா ?

**சேனாதிபதி:** வேந்தரே ! இவனோ பச்சைப் பாலகன். 'இளங்கன்று பயமறியாது'. பகைவனுடைய வலிமையை இவனறியான்.

**சேனாதிபதியின் துணைவன்:** என்னே, இச்சிறுவனது வீரம்! ஆயினும் சிறுவனுக்குப் படைத்தலைமை கொடுத்தால் பழுத்த படைத் தலைவர்களுக்கு அபவாதம் பிறக்குமே! என் செய்வது?

**ஒரு வீரன்:** (*மற்றொரு வீரனை நோக்கி*) ஏ, [illegible] பார்த்தாயா ? இச்சிறுவனுக்குப் படைத்தலைமை வேண்டுமாம். என்ன வீரம்! என்ன தியாகம்!

**பிருதிவிராஜன்:** சிறுவ! உன் வீரத்தை மெச்சினேன். பகைவன் மிகவும் வலிமையுள்ளவன். தவிர, நம் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பான ஜெயச் சந்திரனே அவனுக்கு உதவி புரிந்து வருகிறான். ஆதலின் உன் வீரத்தைப் பரீட்சிக்க இது சமயம் அல்ல.

**அலங்காரன்:** அரசரே! புலிக்குப் பிறந்தது பூனை ஆகுமா? நம் குலத்தின் மானம் குறையா திருக்க, என் தந்தையின் கீர்த்தி குலையா திருக்க.........

(பிருதிவிராஜன் குறுக்கிட்டு)

**பிருதிவிராஜன்:** சிறுவ! உன் தந்தையாரின் கீர்த்திக்கு என்ன குறைவு, அவர் ஒரு தியாகி!

**அலங்காரன்:** அரசரே! என் தந்தையாரின் உடல் மகோபா யுத்தகளத்தில் காணப்படவில்லை. ஆதலின் அவர் முதுகு காட்டி ஓடிவிட்டா ரென்று என் நண்பர்கள் என்னை ஏளனம் செய்கின்றனர்.

**பிருதிவிராஜன்:** (எழுந்து நின்று ஆவேசத்துடன்) சிறுவ! நீ மனம் கலங்காதே. உன் தந்தையார் தியாக மூர்த்தி. மகோபா யுத்தத்தில் உன் தந்தை யாரும் நானும் ஒருவர் பக்கம் ஒருவர் நின்று பகைவரை வெட்டி வீழ்த்திவந்தோம். முதலில் நான் படுகாயமடைந்து பூமியில் சாய்ந்தேன். உன் தந்தையார் இரு கால்களும் இழந்து தரையில் வீழ்ந்தார் கழுகுகள் என் உடலைக் கொத்தித் தின்ன விரும்பி என்னைச் சுற்றிவட்ட மிட ஆரம்பித்தன. அவைகளைத் துரத்த நான் சக்தியற்று இருந்தேன். அப்பொழுது உன் தந்தையார் அவரது உடலிலிருந்து தசையை அரிந்து அப்புறம் வீசவே, கழுகுகள் அத் தசைத்துண்டுகள் வீழ்ந்த திசை நோக்கிச்

சென்றன. பின்னர் சில படைவீரர்கள் என்னைத் தூக்கிச்சென்று காப்பாற்றினார்கள். உன் தந்தையார் தம் உயிரைக் கொடுத்து என்னையும், என் மூலம் நம் தேசத்தையும் காப்பாற்றினர். அவரது தியாகமே தியாகம்! நீ உன் மனக்கவலையை விடுக. நான் உன் வீரத்தை மெச்சுகிறேன். உனக்குப் படைத் தலைமையும் தந்தேன்.

## கேள்விகள்

1. அலங்காரன் யார்?
2. அவன் பிருதிவிராஜனிடம் வேண்டிக்கொண்டது என்ன?
3. பிருதிவிராஜனுடன் போர் புரிந்து வந்தது யார்?
4. அலங்காரனுடைய தந்தையார் எவ்விதம் மரணம் அடைந்தார்?

## அப்பியாசம்

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் சரியான எழுத்தை எழுது :—

1. எனக்கு — படைத்தலைமை கொடுங்கள்.
2. குலத்தை — கெடுக்கவந்தவன் இவன்.
3. வீரர்கள் அவனை — தூக்கி — சென்றார்கள்.
4. எல்லோரும் அவனை — புகழ்ந்தார்கள்.

# ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இளமையிற் கல்,
4. இயல்பு அலாதன செயேல்.
5. ஈவது விலக்கேல்.
6. உடையது விளம்பேல்.
7. உத்தமனுயிரு.
8. ஊக்கமது கைவிடேல்.
9. ஊருடன் கூடி வாழ்.
10. எண்ணெழுத் திகழேல்.
11. ஏற்பது இகழ்ச்சி.
12 ஐயம் இட்டு உண்.
13. ஒதுவது ஒழியேல்.
14. ஔவியம் பேசேல்.
15 கண்டொன்று சொல்லேல்.
16. கீழ்மை அகற்று.
17. குணமது கைவிடேல்
18. கூடிப் பிரியேல்.
19. கெடுப்பது ஒழி.
20. கேள்வி முயல்.
21. கொள்ளை விரும்பேல்.
22. சான்றோர் இனத்திரு.
23. சுளிக்கச் சொல்லேல்.
24. சூது விரும்பேல்.
25. செய்வன திருந்தச் செய்.
26. சேரிடம் அறிந்து சேர்.

27. சோம்பித் திரியேல்.
28. தந்தை தாய்ப் பேண்.
29. தீவினை அகற்று.
30 துன்பத்திற்கு இடம் கொடேல்.
31. தூக்கி வினைசெய்
32. தெய்வம் இகழேல்.
33. தேசத்தோடு ஒத்துவாழ்.
34. நன்றி மறவேல்.
35. நன்மை கடைப்பிடி.
36. நாடு ஒப்பன செய்.
37. நூல் பல கல்.
38. நெற் பயிர் விளை.
39. நோய்க்கு இடம் கொடேல்.
40. பருவத்தே பயிர் செய்.
41. பிழைபடச் சொல்லேல்.
42. பூமி திருத்தி உண்.
43. பெரியாரைத் துணைக்கொள்.
44. பொருள்தனைப் போற்றி வாழ்.
45. மனம் தடுமாறேல்.
46. மீதூண் விரும்பேல்.
47. மூர்க்கரோடு இணங்கேல்.
48. மேன் மக்கள் சொற்கேள்.
49. மொழிவது அறமொழி.
50. வல்லமை பேசேல்
51. வித்தை விரும்பு.
52 வெட்டெனப் பேசேல்.
53. வைகறைத் துயிலெழு.

---

## கொன்றைவேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
இல்லறமல்லது நல்லறம் அன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
கிட்டாதாயின் வெட்டென மற.

கீழோராயினும் தாழ உரை.
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.
சூதும் வாதும் வேதனை செய்யும்.
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.

தாய்சொல் துறந்தால் வாசகமில்லை.
திரைகடலோடியும் திரவியம் தேடு.
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
நூல்முறை தெரிந்து சீலத்தொழுகு.

மாரியல்லது காரியம் இல்லை.
மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது.
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
வீரன் கேண்மை கூர் அம்பாகும்.

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
தீராக் கோபம் போராய் முடியும்.
தோழனோடும் ஏழமை பேசேல்.
நல்லிணக்கமல்லது அல்லற் படுத்தும்.

நீரகம் பொருந்திய ஊரகத் திரு.
நெஞ்சை ஒளித்தொரு வஞ்சக மில்லை.
நைபவ ரெனினும் நொய்ய உரையேல்.
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.
பாலோ டாயினும் காலம் அறிந்துண்.

புலையும் கொலையும் களவும் தவிர்.
பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.
மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.

---

146137
TB
031(3)
N49

RTR/696

18549/RH/79